மதம்
சம்மதம்

9வது இதழ்

விலை $ 2.00



கனடாவில் வெளியாகும் சமய சஞ்சிகை

ESTD. Since 1994

வெளியிடுவோர்:

வேதாந்த ஞானமன்றம்

2390 Eglinton Ave. East, Unit 228
Scarborough, Ont. M1K 2P5

Tel: (416) 751-8235

(416) 769-7747

Fax: (416) 751-8268

பிரதம ஆசிரியர்:

அடியார் விபுலானந்தா

இணை ஆசிரியர்கள்:

திரு. கே. சிவராமலிங்கம்
(ஒய்வுபெற்ற அதிபர்)

திரு. எஸ். இரட்ணசிங்கம் மாஸ்டர்

மதம் வெளியீடு

விலை $2.00

உயர்குணப் பெருமக்களாகிய மதம் வாசகர்களே! மேலும் மதம் உங்கள் கரங்களில் வருவதையிட்டு நீங்கள் மகிழ்வீர்களென நம்புகிறோம். புத்தாண்டு வாழ்த்துக்கள்

அன்பான தமிழ் மக்களே இந்தப் புதுவருடம் எமக்கு விடிவைத் தரும் நல்ல ஆண்டாக அமையட்டும். எல்லோரும் அமைதியும் சமாதானமும் பெற்று இன்பம் சூழ நல்வாழ்வு வாழ நாம் வாழ்த்துகின்றோம்.


உங்கள் இல்லங்களில் குதூகலம் பொங்கட்டும். உங்கள் மனங்களில் இனிய புத்துணர்வு பொழியட்டும். உங்கள் முகங்கள் புன்னகையுடன் துலங்கட்டும். இறைஅருள் பொலியட்டும். எல்லோருக்கும் இதயங்கனிந்த தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

அடியார் விபுலானந்தா
பிரதம குரு
வேதாந்தஞானமன்றம் ஏப்ரல் 2000

எமது வாசகர்களுக்கும்
மன்ற உறுப்பினர்களுக்கும்
நற்போதனைக்குருமார்களுக்கும்
மன்ற மாணவர்களுக்கும்
பெற்றோர்களுக்கும்
மற்றும் அனைத்துத் தமிழ் மக்களுக்கும்
எமது நிறைவான

புத்தாண்டு
வாழ்த்துக்களும்
நல்லாசிகளும்
உரித்தாகட்டும்

ஆசிரியர் பேனாவிலிருந்து.........



மதம் மக்களை மகிழ்வுடன் வாழ வழிவகுத்து மான்புறச் செய்வதையே நோக்கமாகக் கொண்டது. மதங்கள் பலவாக இருந்தாலும் அவை கூறும் மார்க்கம் ஒன்றே யாகும். உயரச் சிகரங்களில் உற்பத்தியாகும் ஆறுகளெல்லாம் இறுதியில் உப்புக் கடலுள் சங்கமிப்பதைப் போன்று - சைவம் - கிறிஸ்தவம் - பௌத்தம் - இஸ்லாம் - ஆகிய மதங்கள் எல்லாம் இறுதியில் ஒருவனான இறைவனை அடையவே வழி காட்டுகின்றன. வீறுள்ள மனிதன் பேறுகள்பெற்று - தேறுதலடையவும் ஆறுதல் பெறவும். மதம் - வழிகாட்டுகின்றது என்றால் மிகையில்லை. அமைதியான - ஆனந்தமான நிம்மதியான நிறைவான வாழ்விற்கு மதம் வழி சமைக்கிறது. பொருள்வளம் மிக்குற்ற விஞ்ஞான வளர்ச்சியில் விலகி நிற்கும் மேற்குலக நாடுகளின் மக்களும் இன்று ஆன்மீகத்தில் அதிக நாட்டம் செலுத்த தலைப்பட்டிருக்கிறார்களென்றால் இறை சிந்தனை, வாழ்வியல் சிக்கல்களை குறைத்து நீக்கி - மன அமைதியையும் - சமாதானத்தையும் ஏற்படுத்தவல்லது என்பது. அதிக அளவில் உணரப்பட்டு வருகின்றது என்பதே பொருள். பொருளால் அடையமுடியாதவற்றை அருள்மூலம் அடையலாம் என்பது இன்றைய உலகில் நிதர்சனமாகி வருகின்றது. பக்தர்களும் - சித்தர்களும் -முக்தர்களும் புரியும் அதிசயங்கள் - விஞ்ஞான விளக்கத்திற்கு அப்பாற்பட்டவை இது தெய்வீக விளையாடல். எனவே மதக்கோட்பாடுகளை மனிதன் - மறந்தோ அல்லது துறந்தோ வாழ முடியாது. மனித வாழ்வில் சமயம் - அல்லது மதம் - சங்கமமாய் உள்ளது. எனவே அந்த வகையில் - மதம் என்ற இச் சஞ்சிகை ஆன்மீகத்தை வளர்ப்பதில் ஓரளவு பங்களிப்பைச் செய்து மக்களிடம் அன்பையும் - பண்பையும் வளர்த்து அறவாழ்வில் அவர்களை ஈடுபடுத்துமேயானால் அதுவே போதுமானது.


மதத்தின் ஊடாக 'மதம்' தலைக்கேறாமல் மனிதத்துவம் மலரட்டும்.



சுவாமி சச்சிதானந்த மகரிஷி அவர்கள் கென்னடி அன் எக்லிங்ரன் சந்திப்பில் உள்ள வேதாந்த ஞானமன்ற பிரதான செயலகத்தைத் திறந்து வைக்க அழைத்துச் செல்லும் காட்சி



சுவாமி சச்சிதானந்த சுவாமிகள் வேதாந்த ஞானமன்றத்தைத் திறந்து வைக்கும் காட்சி



வேதாந்த ஞானமன்ற திறப்பு விழாவில் சுவாமி சச்சிதானந்த சுவாமிகளுக்குப் பாத பூஜை செய்யும் காட்சி

ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் மாலை 6 மணியிலிருந்து 8:30 மணி வரை
வேதாந்த ஞானமன்றத்தில் நடைஅபறும் சந்சங்கத்தில் பஜனை, சிவலிங்க அபிஷேகம், சிவகுராணம் ஓதுதல், நற்சிந்தனை படித்தல், தியானம் செய்தல், பகவத்கீதை விளக்கம் போன்றவை நடைபெறும்.

<u>சமய வகுப்புகள்</u>

ஒவ்வொரு வெள்ளியும், சனியும்
மாலை 5மணியிலிருந்து 7 மணி வரை
சைவத்தமிழ் வகுப்புகளும் நடைபெறுகின்றன.






வேதாந்த ஞானமன்றத்தில் நடைபெறும் சைவத்தமிழ் வகுப்புக்களில் ஒன்று



வேதாந்த ஞானமன்றத்தில் நடைபெறும் சைவவகுப்பில் மாணவர்கள் தியானம் பயில்கின்றார்கள்



மன்ற அலுவலகத்தில் அடியாருடன் நூலகப்பொறுப்பாளர் திரு. சபாரத்தினம் ஐயா

வளரும் சத்சங்கம்
சிறுவர் பகுதி
மகாபாரதம்

வே. கணேஸ்வரன், தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம் - கனடா

6. சத்தியவதியின் பிள்ளைகள்



சந்தனுவுக்கும், சத்தியவதிக்கும் சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தனர். சித்திராங்கதன் வீரம் மிக்கவனாகவும் அறிவு மிக்கவனாகவும் வளர்ந்தான். விசித்திர வீரியன் சிறந்த வில்வீரனாகத் திகழ்ந்தான். குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாவதைக் காண்பதற்குள் சந்தனு மரணமடைந்தான்.

கந்தவர்களுள் சித்திராங்கதன் என்ற பெயர் கொண்ட பொறாமை பிடித்த ஒருவன் இருந்தான். பூமியில் தனது பெயர் கொண்ட ஒரு மானிடன் வாழ்ந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவன் சந்தனுவின் பிள்ளைகளுடன் போர் தொடுத்து சித்திராங்கதனைக் கொன்று விட்டான். அப்போது விசித்திர வீரியன் மிகவும் சிறுவனாக இருந்ததால் அவன் பக்குவம் பெறும்வரை நாட்டைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்படி பீஷ்மரிடம் சத்தியவதி கேட்டுக் கொண்டாள். அதன்படியே நாட்டைப் பரிபாலித்தார் பீஷ்மர். விசித்திர வீரியனுக்கு தகுந்த வயது வந்ததும் அவனிடம் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டார்.

விசித்திர வீரியன் வாலிப வயதை அடைந்ததும் அவனுக்குத் திருமணம் செய்துவைக்க சத்தியவதி எண்ணினாள். அப்போது காசிநாட்டு அரசகுமாரிகளின் சுயம்வர மண்டபத்தில் ஏற்கனவே பல வீரமிக்க அரசகுமாரர்கள் திரண்டிருப்பதைக் கண்டார். அரச குமாரிகள் மூவரும் அங்கேயே இருந்தனர். அவர்களைப் பார்த்தவுடனேயே "இவர்கள்தாம் விசித்திர வீரியனுக்கு ஏற்றவர்கள்" என்று முடிவு செய்தார் பீஷ்மர். அந்த சபையில் அமர்ந்திருந்த பிற அரச குமாரர்கள் யாரையும் பற்றிக் கவலைப்படாமல் அந்த மூன்று கன்னியரையும் கவர்ந்து சென்று ரதத்தில் அமர்த்தினார். பிற அரசர்கள் தடுத்த போது தமது உரத்த குரலில் பின்வருமாறு கூறினார். "பெண்களைக் கவர்ந்து சென்று திருமணம் செய்து கொள்வதை நமது சாஸ்திரங்கள் அனுமதித்துள்ளன. அதற்கு ஒப்பவே நானும்

இவர்களைக் கூட்டிச் செல்கிறேன். துணிவுள்ளவர்கள் என்னை எதிர்த்துப் போரிடலாம்." இவ்வாறு கூறிவிட்டு பீஷ்மர் மிகுந்த வேகத்துடன் ரதத்தைச் செலுத்த ஆரம்பித்தார். இதனைக் கண்ட பிற மன்னர்கள் ஆத்திரத்தால் கோபம் தலைக்கேற போர்க்கோலம் பூண்டனர். ஆயுதங்களுடன் ரதத்தில் சென்று பீஷ்மரை எதிர்த்தனர். எத்தனையோ அரசர்கள் சேர்ந்து எதிர்த்தும் தனி மனிதராகிய பீஷ்மரை எதுவும் செய்ய முடியவில்லை. தேவஅசுர யுத்தம் போல் காட்சி அளித்த அந்தப் பெரும் போரில், எதிர்த்து வந்த அனைவரையும் வென்றுவிட்டு மூன்று மணப்பெண்களுடனும் பீஷ்மர் அஸ்தினாபுரம் விரைந்தார். ஆனால், சௌபல நாட்டு மன்னனான சல்லியன் மட்டும் விடாமல் தொடர்ந்து சென்று பீஷ்மரைத் தடுத்தான். பீஷ்மர் அவனை வென்றாரெனினும் கொல்லாமல் விட்டுவிட்டார்.

தடைகளையெல்லாம் வென்று அஸ்தினாபுரத்தை அடைந்த பீஷ்மர் திருமண ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். அப்போது அந்தக் கன்னியருள் மூத்தவளான அம்பை பீஷ்மரிடம், "பீஷ்மரே நான் ஏற்கனவே சௌபல நாட்டு மன்னரான சல்லியரை என் கணவராக வரித்துவிட்டேன். இதற்கு என் தந்தையும் அனுமதி அளித்திருந்தார். நீங்கள் மட்டும் தடுத்திராவிட்டால் அந்த சுயம்வரத்தில் நான் அவருக்கே மாலையிட்டிருப்பேன். நீங்கள் தர்மநெறி அறிந்தவர். உங்களுக்கு எது உசிதமாகப் படுகிறதோ அவ்வாறே செய்யுங்கள்" என்று கூறினாள். பீஷ்மரும் அம்பையின் ஆசைகளை மதித்து அவள் நாடு திரும்ப அனுமதி அளித்தார்.

அம்பிகையும் அம்பாலிகையும் விசித்திரவீரியனை மணந்து இன்பமாக வாழ்ந்தனர். இந்த இன்பம் வெகுநாள் நீடிக்கவில்லை. ஏனெனில் விசித்திரவீரியன் இளமையிலேயே மரணமடைந்தான். பீஷ்மரின் துயரம் சொல்லவொண்ணாதாகியது.

பட்டினத்துப் பிள்ளையார்

செ. வேலாயுதபிள்ளை B.A.(Hons.) Tamil

இவர் காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்து, கப்பல் வாணிகஞ் செய்து, பெருஞ்செல்வமீட்டிச் சிறப்பாக வாழ்ந்த காரணத்தால், நாட்டவர் எல்லோரும் இவரைப் பட்டினத்துப்பிள்ளை, என்று மதிப்பாகப் பேசிவந்தனர். பட்டினம் என்றால் காவிரிப்பூம்பட்டினத்தையே குறிக்கும். பட்டினப்பாலை என்னும் சங்கப் பாடலில் இது விளக்கமுறுகின்றது.

இவருடைய பிள்ளைப்பெயர் திருவெண்காடர். தந்தையார் சிவநேசர்; தாயார் ஞானகலை அம்மையார். இவர் இளமையிலேயே கல்வியிற் சிறந்து விளங்கி, பின்னர் சிவகலை அம்மையார் என்னும் பெண்ணைத் திருமணஞ் செய்து, தங்கள் குலத்தொழிலாகிய கப்பல் வாணிகத்தொழிலை மேற்கொண்டு பெருஞ்செல்வம் ஈட்டினார். இல்வாழ்க்கையில் மகப்பேறு இல்லாமையால் திருவிடைமருதூர் இறைவனை வேண்டி இருவரும் வரங்கேட்டனர். அவ்வூரிலே ஏழை அந்தணன் ஒருவன் மருதவாணர் என்னுஞ் சிறுவனைத் திருவெண்காடருக்குத் தந்து, பெரும்பொருள் பெற்று மகிழ்ந்தான். சிவபெருமானே அவ்வாறு சிறுவனாக வந்து அந்தணனிடம் வாழ்ந்தவர் என்பர்.

மருதவாணர் வளர்ந்து கப்பல் வாணிகத்தை மேற்கொண்டு, செல்வத்தைப் பன்மடங்கு விருத்தி செய்தார். ஒருநாள் மருதவாணர் திருவெண்காடருக்கு ஞானம் உண்டாகும் வண்ணம்.

"காதற்ற ஊசியும் வாராது காணும்

கடைவழிக்கே."

என்று ஏட்டில் எழுதித் தாயாரிடங் கொடுத்துவிட்டு மறைந்தார். மருதவாணரின் மறைவால் வருந்திய திருவெண்காடர், தம் மனைவியிடமிருந்து அந்த ஏட்டைப் பெற்றுப்படித்தார். அந்த அளவில் அவருக்கு நிலையாமை உணர்வு மேலோங்கியது. அவர் பெருந்துறவு பூண்டார். தமது கணக்காளரான சேந்தனாரை அழைத்துத் தம் பணத்தையெல்லாம் ஊரார் எடுத்துப்போக அனுமதிக்கும்படி கூறி, இல்வாழ்க்கையைத் துறந்து, ஓடேந்தி வீடுதோறும் பிச்சையேற்று உண்டு, துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். தென்னாட்டிலும், வடநாட்டிலும் திருத்தல யாத்திரை மேற்கொண்டு பல பாடல்கள் பாடி, ஆங்காங்கே பல சித்துகள் செய்துவந்தார். திருவொற்றியூரில் கடற்கரையில் விளையாட்டுச் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடி வந்தார். ஒருநாள் தம்மை மணலுக்குள்ளே புதைக்கச் செய்து சிவலிங்கமாக விளங்கினார். இது "அருவுருவச் சித்தி" என்று சொல்லப்படும் முத்தி நிலையாகும். திருவொற்றியூரிலே அடிகளாருக்கு எடுத்த கோயில், இன்னும் பல அடியார் வந்து தொழச் சிறப்புற விளங்குகின்றது.

பட்டினத்துப் பிள்ளையார் காலம்:

தேவார திருவாசகங்களுக்குப் பின்னரும், திருமுறை தொகுத்த நம்பியாண்டார் நம்பிக்கு 12ஆம் நூ.ஆ முன்னரும் 10-11 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் இவர் வாழ்ந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர் கூறுவர். அவர் பாடிய நூல்களுள் பதினோராந் திருமுறையில சேர்க்கப்பட்டுள்ளன. அந்த ஐந்து நூல்களும் பின்வருமாறு:

1. **கோயில் நான்மணி மாலை**
2. **திருக்கழுமலை மும்மணிக்கோவை**
3. **திருவிடை மருதூர் மும்மணிக்கோவை**
4. **திருவேகம்பமுடையார் திருவந்தாதி**
5. **திருவொற்றியூர் ஒருபாவொருப∴து**

இவற்றின் நடை உயர்ந்த செந்தமிழ் நடை. இல்லறத்தையுஞ் சிறப்பித்துப் பாடியுள்ளார்; அகத்துறையிலும் பாடியுள்ளார். பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு என்னுந் தொகுப்பில் மேற்சொன்ன ஐந்து நூல்களோடு,

6. **கோயில் திருவகவல்**
7. **கச்சித்திருவகவல்**
8. **திருவேகம்ப மாலை**
9. **திருவேகம்ப விருத்தம்**
10. **முதல்வன் முறையீடு**
11. **அருட்புலம்பல்**
12. **பூரண மாலை**
13. **உடற்கூற்று வண்ணம்**
14. **பல தனிப்பாடல்கள்**

ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. பிந்திய பாடல்களின் நடை எளியது; பேச்சுமொழி நடையை ஒட்டியது. எளிதில் எல்லோரும் பொருளுணரக் கூடிய பாடல்கள். பட்டினத்துப்பிள்ளையார் ஒரு சித்தராயும் விளங்கினார். அதனால் அவருடைய பாடல்கள் "சித்தர் ஞானக் கோவையிலுஞ்" சேர்க்கப்பட்டுள்ளன; இவரது சீடர்கள்:

1.சேந்தனார் (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியவர்) பிள்ளையாரிடங் கணக்காளராயிருந்தவர்.

2. பத்திரகிரியார் - அவ்வூர் அரசர்

3. பட்டினத்துப்பிள்ளையாரைப் போற்றிப் பாடிய ஞானிகள், தாயுமான சுவாமிகளும், (கண்ணுடை) வள்ளலாருமாவர்.

பிற்கால ஆராய்ச்சியாளர்கள் இருவேறு பட்டினத்துப் பிள்ளையார்கள் இருந்திருக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆயின் துறவெய்திய ஆரம்பகாலத்தில் பாடியவை பதினோராந்திருமுறைப்பாடல்கள் என்றும், காலப்போக்கில் அடிகள் ஊரூராகச் சுற்றிப் பொதுமக்களுக்கு அறிவுறுத்திப் பாடிய பாடல்கள் எளிய இனிய பேச்சுநடையில் அமைந்துள்ளன என்றுமே நான் நம்புகிறேன். தாய் இறந்தபோது தாயைத் தகனஞ் செய்யும் வேளையில் பாடிய

பாடல்கள் உள்ளத்தை உருக்கவல்லன.

“அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலம் மேல்வைத் தழும்மைந் தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே”

பட்டினத்தடிகள் தாயாருக்கு இறுதிக்கடன் தீர்த்தவாறு

துறுவு பூண்ட பட்டினத்தடிகளை அவர் தாயார் விளித்து இவ்வாறு கூறினார்; “எனக்கு மூப்பு வந்துவிட்டது. நான் இறந்த பின் எனக்குக் கொள்ளிவைத்து, இறுதிக்கடன் செய்ய நீ ஒருவனே உள்ளாய்; நீ துறவு பூண்டு போனால் எனக்கு இறுதிக்கடன் செய்ய யார் இருக்கின்றார்? அடிகள், தாயார் இறக்குந் தருணத்தில் அங்கு வந்து வேண்டிய கடன்களைத் தாமே செய்து வைப்பதாக வாக்களித்து வெளியேறினார்.

பின்னாளில் அடிகள் திருவெண்காடு என்ற தலத்துக்குச் சென்று, அங்கே தங்கியிருந்தபோது, அவருடைய அன்னையார் இறையடி சேர்ந்தார். உறவினர் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர். இறையருளால் அதை அறிந்த அடிகள், காவிரிப்பூம்பட்டினத்துக்கு வந்து, முன்பு தாம் உறுதிமொழி தந்தபடி ஈமக்கடனை இயற்றினார். அப்போது அடிகள் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்குவன. முற்றும்துறந்த முழுஞானியாயிருந்தபோதும், அவர் பெற்றதாயின் பொருட்டு மனமுருகிப் பாடிய செய்யுள்கள் “தாயன்பு” எத்தகையது என்பதை விளக்குவன.

“ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.”

“வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய் தனக்கோ
விறகிட்டுத் தீ மூட்டுவேன்.”

பின்னர் உறவினர் செய்த சிதையை அகற்றிவிட்டுப் பச்சை வாழைத்தண்டுகளைக் கொணர்ந்து அடுக்கி அதன்மேல் தாயார் உடலை வைத்து இவ்வாறு பாடினார்.

(தழல் மூட்ட எண்ணியபோது)

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்து - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தனக்கோ

எரியத் தழல் மூட்டுவேன்.
நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும்
தாய் தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்.

(வாய்க்கரிசி இட்டபோது)

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியமே
மானே எனவழைத்த வாய்க்கு.

(கொள்ளி வைக்கும் போது)

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

(தீ மூட்டியபோது)

“முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென்னிலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானு மிட்டதீ மூள்கவே.”

என்று பாடியதும் பச்சை வாழைத்தண்டு தீப்பற்றிச் சுவாலித்து எரியத் தொடங்கியது. அப்போது அன்னையின் உடல் எரிவதைக் கண்டு அடிகள் பாடியது.

(எரியும் போது)

“வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாயக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.”

(உடல் எரிந்து முடியும்போது பாடியது)

“வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ? என்னை மறந்தாளோ? - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரங்கிடந்
தென்னையே ஈன்றெடுத்த தாய்.”

(அன்னையின் சாம்பரில் பால் தெளிக்க அன்பரை அழைத்தல்)

"வீற்றிருந் தாளன்னை வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமேயாம்."

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"

-கந்தையா சிவநேசன்

தொண்டர் என ஈண்டு குறிப்பிடப்படுபவர் இறைவனுக்கும் இறைவனுடைய அடியார்களுக்கும் தொண்டுகள் செய்யும் மெய்யடியார்களேயாவர். இவ்வடியார்கள் அன்றும் இன்றும் என்றும் அவதரித்துக்கொண்டே இருக்கிறார்கள். இவர்களிற் சிலர் இல்லறத்திலும் சிலர் துறவறத்திலும் நின்று தத்தம் நெறிபிறழாது ஒழுகும் ஒழுக்க சீலர்கள்; மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகளையும் அடக்கியாள்பவர்கள்; மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் தூய்மையுடையவர்கள்; அல்லும் பகலும் இறைவன் திருவடிகளையே போற்றித் துதிப்பவர்கள்; மெய்யடியார்களைச் சிவனென மதிப்பவர்கள். இவ்வையம் உய்ய நன்னெறி காட்டுபவர்கள்; எல்லாம் சிவன் செயல் என்று எண்ணி இன்பதுன்பங்களில் விருப்பு வெறுப்பற்றிருப்பவர்கள்; இவர்களின் பெருமைக்கு அளவேயில்லை; பெருமையால் அவர்கள் தமக்குத் தாமே ஒப்பாவர். இவர்கள் நின்றும், இருந்தும், கிடந்தும் சிவனே! சிவனே! என்னச் சிவனும் உமையாளொடு, தன் கன்றைப் பிரிந்திருக்கமுடியாது, பின் தொடரும் பசுவைப் போல் அவர்களைத் தொடர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருப்பார். இக்கருத்தினை ஔவையார் தமது நீதி வெண்பாவில்,

"சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவனுமையா ளோடுந் திரிவன் - சிவனருளாற்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்று பசுப்போற் தொடர்ந்து"

எனப் பாடியுள்ளார்.

பெரியது எது? அரியது எது? கொடியது எது? இனியது எது? என்ற நான்கு உண்மைகளை உலகிற்கு உணர்த்தும் பொருட்டு ஒருமுறை முருகப்பெருமான், ஔவையார் வரும் வழியில் ஒரு நாவல் மரத்தின்மேல் இடைப்பையனாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தார். அம்மரநிழலில் இளைப்பாறத் தங்கிய ஔவையார் அவ்விடைப் பையனைக் கண்டு, சில பழங்கள் பறித்துத் தரும்படி கேட்டார். குறும்புத் தனம் புரிய விழைந்த அப்பையன், ஔவைப்பாட்டியைப் பார்த்து, "சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" எனக் கேட்டான். ஔவையாருக்கு ஆச்சரியமாகவிருந்தது. எதற்கும் சுட்டபழம் கேட்போம் என நினைந்து சுட்டபழம் போடு என்றார். அப்பையன் நன்கு கனிந்த பழங்களைப் பறித்து மணலில் வீசினான். அதனால் அப்பழங்களில் மணல் ஒட்டிக் கொண்டது. ஔவையார் அப்பழங்கைளப் பொறுக்கி மணல் நீங்கும்படி ஊதினார். அப்பொழுது அவ்விடைப் பையன், "பாட்டி! சுடுகிறதா?" என்றான். இச்சொற்கள் காதிற்பட்டதும் ஔவையார். வைரமரத்திற்கு நாணாத கோடரி வாழைப்பழத்திற்கு நாணியது போல மனம் மிகவருந்தினார். உடனே முருகப்பெருமான் ஔவையார் முன் காட்சியளித்து அவரின் மனவேதனையைப் போக்கி, நான்கு உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதற்காக பெரியது எது? கொடியது எது? அரியது எது? இனியது எது? என்ற கேள்விகளைக் கேட்டார். பெரியது எது என்ற வினாவுக்கு ஔவையார் விடையளிக்கும் பொழுது, மிகப்பெரியது பூமி,

பூமியிலும் பார்க்கப் பூமியைப் படைத்த பிரமா பெரியது; திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டதால் திருமாலிலும் பார்க்க திருப்பாற்கடல் பெரிது; அகத்திய முனிவர் ஒருமுறை சப்த சமுத்தரங்களையும் தமது உள்ளங்கையில் அடக்கியதால் திருப்பாற்கடலிலும் பார்க்க அகத்தியர் பெரியவர்; அகத்தியவர் மண் கலசத்திற் பிறந்ததால் அகத்தியரிலும் பார்க்க மண் உள்ள புவி பெரியது; புவியை ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேடன் என்ற பாம்பு ஒரு தலையால் தாங்கி நிற்பதால் புவியிலும் பார்க்க ஆதிசேடன் பெரியது. ஆதிசேடன் உமையவள் சிறுவிரல் மோதிரம் ஆகையால் ஆதிசேடனிலும் பார்க்க உமையவள் பெரியவர்; உமையவள் சிவபெருமானுடைய இடப்பாகத்தில் ஒடுக்கமாயிருப்பதால் உமையவளிலும் பார்க்கச் சிவபெருமான் பெரியவர். சிவபெருமான் தொண்டர்களின் உள்ளத்தில் ஒடுங்கியுள்ளதால் சிவபெருமானிலும் பார்க்க தொண்டர் பெருமை தான் மிகப் பெரிது; எனக் கூறியுள்ளார். இப்பாடல் பின்வருமாறு:

'பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகனோ கரியமால் உந்தியில் வந்தோன்
கரியமாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடலோ குறுமுனி அங்கையிலடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒரு தலைப்பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரே தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூரில் பரவையாருடன் வாழ்ந்து வரும் நாளில் வழமைபோல் ஒருநாள் சுந்தரர் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகேசப் பெருமானை வணங்கும் பொருட்டு கோயிலை வந்தடைந்தார். அப்பொழுது அங்கு தேவாசிரிய மண்டபத்தில் மிகச் சிறந்த சிவனடியார்கள் கூடியிருந்தார்கள். அவர்களை முதலில் வணங்காது சுந்தரர் தம் இறைவனை வணங்குவதற்காக ஒரு புறம் ஒதுங்கிச் சென்றார். இதைக்கண்டதும் அத்திருக் கூட்டத்திலிருந்த விறன்மிண்ட நாயனாருக்குக் கோபம் வந்தது. அடியார்களை முதலில் வணங்கிய பின்னரே ஆண்டவனை வணங்க வேண்டுமென்பது இவரின் கொள்கை. அதனால் விறன்மிண்டர், "நம் அடியார்களின் திருக்கூட்டத்தைப் பேணாமல் செல்லும் சுந்தரனும் நமக்குப் புறம்பு; அவனை ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பு" என்றார். இதை அறிந்ததும் சுந்தரர் கோயிலினுட் சென்று, "இந்தத் திருத்தொண்டர் கூட்டத்தில் என்னையும் ஒருவனாக்கி அடியவர்களுக்கு நான் அடியானாகச் செய்யும் நாள் எந்நாளோ"? என்று தியாகேசப்பெருமான் தாள் பணிந்து நின்றார். கொன்றைமாலை அணிந்த தியாகேசப்பெருமானும் சுந்தரர் முன் காட்சியளித்தார். சுந்தரரும் இறைவனைப் போற்றி வணங்கினார். சுந்தரர் விரும்புகின்ற பெருநிலையை அருள இறைவன் திருவுளங்கொண்டு, சிவனடியார்களின் திருத்தொண்டுகளையும், அவர்களின் பெருமைகளையும் கூறி, இத்தகைய ஒப்புயர்வற்ற அடியார்களின் திருக்கூட்டத்தை நீயும் அடைவாயாக, என்று திருவருள் செய்து, "எம் அடியார்களை நீ பணிந்து, பொருள் நிறைந்த செந்தமிழ்ப் பாக்களால் பாமாலை பாடுவாயாக எனக்கூறி,

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினார்.

பின்னர் சுந்தரரும் தேவாசிரிய மண்டபத்திற்குச் சென்று சிவநெறியில் நிலைபெற்ற அவ்வடியார்கள் ஒவ்வொருவர் திருப்பெயரையும் சொல்லி, அவர்களுக்கு அடியேன், அடியேன் என்று திருத்தொண்டர்த் தொகை எனும் பதிகத்தைப் பாடி வணங்கி நின்றார். தம்பிரான் தோழனாக விளங்கிய

சுந்தரரே அடியவர்களின் பெருமையை நன்குணர்ந்து அடியவர்களுக்கு அடியவனாக இருக்க விழைந்தாரெனில் அடியவர்களின் பெருமை இவ்வளவென்று சொல்லும் தரமன்று என்பது நன்கு புலனாகும்.

"அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே"

எனத் தாயுமான சுவாமிகள் தமது பராபரக்கண்ணியில் தொண்டர்களுக்குத் தொண்டு செய்வதைப் பெரும் பேறாகக் கருதுகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது காலத்திலும் தமிழ் ஈழத்தில் கடைசியிற் சுவாமி இருந்தார். இவரின் சீடர் செல்லப்பாச் சுவாமி, இவரின் சீடர் சிவயோகசுவாமி, மற்றும் கந்தையாச் சுவாமி (குடைச்சுவாமி), ஆத்மஜோதி முத்தையாச் சுவாமி முதலிய மெய்யடியார்கள் வாழ்ந்து மக்களின் நல்வாழ்வுக்கும், தெய்வீக உணர்விற்கும் வழிகாட்டினர். இவர்களின் பக்தர்கள் பலர் இன்றும் அவர்களைப் போற்றி வணங்குகின்றனர். சிவதொண்டன் நிலையம் இதற்கு ஓர் உதாரணமாகும்.

இந்தியாவிலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், தவத்திரு ரமணமகாரிஷி, சுவாமி சுத்தானந்தபாரதி, குன்றக்குடி அடிகளார் முதலியோர் தோன்றி எமது சமயத்திற்கும், சமூகத்திற்கும் அளப்பரும் சேவைகள் செய்துள்ளனர். அன்றியும் அவர்களால் உருவான சீடர்கள் பலர், உலகின் பல பாகங்களிலும் அவர்களின் பெயரால் மடங்கள், சபைகள் என்பனவற்றை உருவாக்கி சேவைகள் பல செய்து வருகின்றனர். முக்கியமாக ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், விவேகானந்தசபை என்பன குறிப்பிடத்தக்கன.

இன்று இந்தியாவில் காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஆச்சிரமங்களை அமைத்து ஆன்மஈடேற்றத்திற்கும், மக்கள் நல்வாழ்வுக்குமென சிறந்த நற்பணிகளைச் செய்து வருகின்றனர். ஏன்! வடஅமெரிக்கா, காவாய்தீவு முதலிய இடங்களிலும் சச்சிதானந்தசுவாமி, சுவாமி சின்மயானந்தா, சிவயோகசுவாமிகளின் சீடன் சிவாய சுப்பிரமுனிய சுவாமி போன்றோரும் அரும்பெரும் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

"நல்லாரைக் காண்பதும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதும் நன்று"

என்ற ஔவையாரின் மூதுரைப்படி மெய்யடியார்களின் வரலாறுகளைக் கற்றும், அவர்கள் காட்டும் நன்னெறிகளை இயன்றவரை கடைப்பிடித்தும், அவர்களின் குணங்களை மற்றவர்கட்கு எடுத்துக்கூறியும், தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் மெய்யடியார்களைப் பணிந்தும், அவரோடு இணங்கியும் நாம் வாழ்வோமாயின், வாழ்வாங்கு வாழ்ந்து, கிடைத்தற்கரிய மானிடப் பிறவியின் பயனை அடைந்தவர்களாவோம்.

கைலாய பரம்பரையின் இன்றைய சற்குரு

- ம. சிவசாமி -



சிவயோக சுவாமிகளின் கொழும்புத்துறைக் கொட்டிலிற்கு 1949ம் ஆண்டு வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று ஓர் அமெரிக்க இளைஞர் வந்தார்.

அவரின் வருகையை எதிர்பார்த்திருந்த சிவயோக சுவாமிகள் அவருக்குச் சுப்பிரமணிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார்.

ஆம்! அவரே நமது குருதேவர் சிவாய சுப்பிரமணிய சுவாமிகள்.

சிவயோக சுவாமிகள் குருதேவருக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அவரின் வாழ்வின் பணிகள் குறித்து

சக்தி வாய்ந்த அறிவுரைகளையும் வழங்கினார் சுவாமிகள். குருதேவரின் முதுகில் ஓங்கிப் பலமாக அடித்து, "இது அமெரிக்காவிலே கேட்கும். இனி, உலகெங்கும் சென்று சிங்கம் போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்களை அமைத்துப் பலருக்கு உணவளிப்பாய் என்று ஆசி வழங்கினார். இந்த அடி குருதேவரை நாதச் சித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது. அப்போது குருதேவருக்கு வயது இருபத்தியிரண்டாகவும், சிவயோக சுவாமிகளுக்கு எழுபத்தியேழுமாகவும் இருந்தது.

குருதேவர் இலங்கையில் இருந்தகாலத்தில் சிவயோகசுவாமிகளின் ஆசியுடன் அளவெட்டி என்னும் கிராமத்தில் ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமத்தை நிறுவினார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றிவரும் சைவசித்தாந்த தர்ம சபை இங்குதான் ஆரம்பமாகியது.

சற்குருவின் ஆணைப்படி குருதேவர் அமெரிக்காவிற்குத் திரும்பி வந்து ஏழுஆண்டுகள்தான் செய்யவேண்டிய பணிகளுக்குத் தன்னை ஆயத்தமாக்கும் சாதனைகளில் ஈடுபட்டார். தினசரி சாதனையாலும், ஆழ்ந்த தியானத்தாலும், ஞானதிருஷ்டி, ஞானதரிசனம், ஞானஒளி ஆகிய அக ஆற்றல்கள் குருதேவருக்கு வெளிப்பட்டன.

1957ம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் குருதேவர் இமாலய கலாஷேத்திரத்தை நிறுவி அமெரிக்காவில் முதலாவது இந்துக் கோவிலையும் திறந்து வைத்தார்.

கிழக்கிற்கும், மேற்கிற்கும் மையமாக விளங்கும் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை என்னும் தீவில் புனித வைலுவ நதிக்கரையில் 1970ம் ஆண்டு குருதேவர் "சைவசித்தாந்ததர்மசபை" யின் தலைமைப்பீடமான "குவை ஆதினத்தை" நிறுவினார். குருதேவர் இந்த ஆதினத்தில் கடவுள் இந்து கோவிலை ஆரம்பித்து ஆறடி உயரமான நடராஜமூர்த்தியைப் பிரதிஷ்டை செய்து அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் சிறு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குவைதீவில் உள்ள புனிதவைலுவ நதியும் அங்குள்ள

உருத்திராட்ச மரங்களும் குருந்த மரங்களும் குவைப்பதியை ஒரு புனிதஸ்தலமாய் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சிறப்பாக மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் 'போற்றித்திருவகவல்' என்னும் பகுதியில் இருவரிகளில் காணப்படும்,

"கவைத்தலைமேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி" என்னும் பாடலால் குவை ஒரு புனிதப்பதியாக காணும்போது உள்ளம் உருகுகிறது.

குருதேவருக்கு 1975ம் ஆண்டு மாசிமாதம் சிவபெருமான் ஓர் அகக்காட்சி அருளினார். இந்த அகக்காட்சியின்படி புனித வைலுவ நதிக்கரையில் ஓர் சுயம்புலிங்கத்தைக் குருதேவர் கண்டார். இச்சுயம்புலிங்கத்தை மையமாகக் கொண்டு மேலைத்தேசங்களின் கருங்கல்லினால் ஆகம விதிப்படியமைந்த முதலாவது கோயிலாக "சன்மார்க்க இறைவன் கோவில்" உருவாகி வருகின்றது.

இங்கு உலகின் மிகப்பெரிய ஸ்படிகலிங்கம் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. அமெரிக்காவிலும் மேலைத்தேசங்களிலும் பல இந்துக்கோவில்கள் உருவாகுவதற்குக் குருதேவர் மூலகாரணமாக இருந்து வருகிறார். மேலைத்தேசங்களில் கோவில்களைக் கட்டிவரும் இந்து சமூகத்தினருக்கு ஆலோசனைகளை வழங்கியும், அவர்களின் கோவில்களுக்கு மூர்த்திகளை வழங்கியும் அவர்களை வழிநடத்தி வருகிறார்.

1979ம் ஆண்டு தொடக்கம் குருதேவர் 'Hindusam Today" எனும் பத்திரிகையை வெளியீடு செய்து வருகிறார். இது இன்று சர்வதேச ரீதியில் இந்துக்களின் குரலாக ஒலிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த லிங்க வடிவைக் கோவில் கொள்ளச் செய்யவே சிற்ப சாஸ்திரமுறைப்படி முழுவதும் கருங்கல்லிலான கோவிலை உருவாக்குவதற்கு பெங்களுரை ஒட்டிய கிராமத்தில் அமைதி ததும்பும் சூழலில் சிற்பக்கூடம் அமைத்து அங்கே சிற்ப சாஸ்திரிகள் மனம் ஒன்றித் தம்பணியை அர்ப்பணித்து வருகிறார்கள். இச்சிற்பக்கற்கள் பகுதி பகுதியாக இறைவன் கோவிலுக்குக் கப்பலில் வந்து சேர இருக்கின்றன.

கூடியவிரைவில் இக்கோவில் திருப்பணிகள் பூர்த்தி அடைந்து கும்பாபிஷேகம் நடைபெறும் திருக்கைலாசநாதனின் காட்சியையும் அவருக்கு ஒப்பான குருதேவர் சிவாயசுப்பிரமணிய சுவாமிகளின் அருட் பார்வையும் பெறும் பாக்கியம் பெறுவதற்கு இம்மாபெரும் திருப்பணிக்காக நாம் ஒவ்வொருவரும் எம்மாலான நிதியை கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி மனநிறைவு பெறுவோமாக!

நிதி அனுப்பவேண்டிய முகவரி:
Sunmarga Iraivan Temple,
Kauais Hindu Monastery,
107 Kaholale Road
Kapaa Hawaii 96746 - USA

Tel: (808) 822-3012
FAx: (808) 822-435

நன்றி
இவ்வண்ணம்
ம.சிவசாமி - ரொரண்டோ

26ம் பக்கத்தொடர்ச்சி

யூரிக் அசிட், அமினோ, அமோனியா, சோடியம், பொட்டாசியம், கல்சியம், மக்னீஷியம், க்ளோரைட், வுழவயட சல்பேட், இன்ஒகானிக் சல்பேட், இன்ஒகானிக் பால்பேட், P.H, Total Mrphbhp (ascc), N/10 ஆசிட் ஆகியன உள்ளன. இன்றைய விஞ்ஞானமும் எமது மூதாதையரின் அரிய கண்டுபிடிப்பை ஆராய்ந்து ஒப்புக் கொண்டுள்ளது.

இராசிபுரம் சிவானந்த ஆச்சிரமம் வெளியீடான சுவாமி பூமானந்தருடைய 'சர்வரோக நிவாரணி' எனும் தமிழ் நூலில் இதைப்பற்றி பல அரிய விடயங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ள விபரங்கள் அறிய விரும்பும் வாசகர்கள் அடியேனைத் தொடர்பு கொள்ளலாம். (416) 751-8235, எல்லோரும் நலமுடன் வாழ்க!

அடியவர் மாட்சியும் ஆண்டவன் காட்சியும்

-எழுதுபவர் நா. க. சிவராமலிங்கம் B.A.

நீள நினைந்து அன்பில் குழைந்து பாடிப்பரவினால் பரமனருள் பக்தர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்பதனை நிதர்சனமாகக் காட்டியவர்கள் அருளாளர்கள். அவனருளாலே அவன்தாள் வணங்கி கூடும் அன்பினில் கும்பிட்டு வாழ்ந்த பாடும் பணியே பணியாய்க் கொண்டு ஆடும் அரனுக்கு ஆட்பட்டு ஏடும் நாடும் போற்ற வாழ்ந்து காட்டிய அருட்செல்வர்கள் அவர்கள். வாழ்த்தவாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாம் இறைவனை இடைவிடாது சிந்தித்து வந்தித்து அருள் வெள்ளத்துள் நினைத்து எம்மை ஆன்மீக நெறிப்படுத்தியவர்கள் அவர்கள். உலகின் தலைவனாகவும் உயிர்களின் தலைவனாகவும் விளங்கும் இறைவனை சிக்கெனப் பிடித்து மாறிலா மகிழ்ச்சியுள் திளைத்தவர்கள் அவர்கள். அன்பர் என்பவர்க்கு அனைத்தும் தரும் ஆண்டவன் அவர்களுக்கு காட்சி தந்து ஆட்கொண்டதனை அவர்களது வாழ்க்கை வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன.

முன்னைப் பிறவியின் நல்வினைப் பயனால் மூன்று வயதில் முழுமுதற்கடவுளை நேரில் காணும் பேறு பெற்றவர் ஆளுடைய பிள்ளையார். அடம்பிடித்து அழுத குழந்தை முன் இறைவன் இறைவியுடன் இடபம் மீது அமர்ந்து காட்சி தந்து திருமுலைப்பால் அமுதூட்டியதால் ஞானம் கைவரப்பெற்றதால் திருவருளில் நிலைக்கச் செய்தமையால் ஞானசம்பந்தரானார். காதில் குழையும் காயத்தில் வெண்ணீறும் முற்றா வெண்டிங்களும் ஏடும் எருதும் பிஞ்சு மனத்தில் ஆழப்பதிந்ததை அவர் பாடிய தோடுடைய செவியன் எனும் பாசுரம் உணர்த்துகின்றது.

தள்ளாத வயதிலும் இறைவனைக் காணவேண்டும் என்ற உள்ளத்து ஆசையினால் கையலங்கிரியில் இறைவனது காட்சியைக் காணவேண்டும் என்று புறப்பட்டவர் அப்பர் பெருமான். நடந்தார், தவழ்ந்தார், உருண்டார், முடியவில்லை அவரது உள்ளத்து உறுதிப்பாட்டை உணர்ந்த உமைபங்கன் அவர் முன் தோன்றி கைலயங்கிரிக் காட்சியை திருவையாற்றில் காணும்படி கட்டளையிட்டான். நெஞ்சம் இறைவனுக்கே இடமாக வைத்து எதற்கும் அஞ்சாது வாழ்ந்த திருநாவுக்கரசர்க்கு சமணர் கொடுத்த நஞ்சையும் அமுதாக்கிய ஆண்டவன் அஞ்சேல் என்று அபயம் அளித்துக் காப்பாற்றினான். அவரது உறுதிப்பாட்டால் திருவையாறு தென்கைலாயமாயிற்று.

அற்புதப் பழ ஆவணம் காட்டி கிழவேதியனாய் வந்து ஆட்கொண்ட அம்மை அப்பனை தம்மானை அறியாத சாதியார் உளரோ என்று உரிமையுடன் உணர்த்துகின்றார். சுந்தரர், வாலிபவயதில் வலியவந்து ஆட்கொண்ட ஆலமுண்ட அப்பனை சாலவும் ஏற்றிப் போற்றி எம்மை இறைவனிடம் வழிப்படுத்துகின்றார். ஞாலம் போற்றும் தொண்டர் சீர்பரவிய சுந்தரர் குருந்த மரநீழலில் குருவாய் காட்சிதந்து ஆட்கொண்ட சிவனை உருக்கமுடன் பாடிப்பரவினார். மணிவாசகர் பரனைப் பார்த்த மாத்திரத்தில் தனது கொள்கை மாறினார். கோலம் மாறினார். கோவணாண்டியானார். ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும். சிவபெருமானைக் கண்ட மாத்திரத்தில் புடம் போட்ட பொன் போலானார் நடம்பயிலும் நாதனுக்கு சேவகம் செய்யும் மாண்புற்றார். இறைவனை மறவாது உறவு கொண்டாடும் போது அவன் தவறாது அருள்வான் என்பது உண்மை. மேலிருந்து கீழிறங்கி வந்து, இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் சேவிக்கும் வாய்ப்பை தந்தருள்வான். இது அருளாளரின் அனுபவ உண்மையாகும். இறைவனிடம் அசைக்கமுடியாத பக்தி கொண்டவன் ஓர் எல்லைக்குப் பிறகு

தெய்வாம்சம் பெற்றவனாகவே மாறிவிடுகின்றான். இறைவனின் இன்னருளைப் பெற்றவர் பிறவிப் பெருங்கடல் நீந்தி பேரின்ப நிலையடைவர்.

சமய அறிவை வளர்க்கும் சைவச் சிறுவர்கள்

வேதாந்த ஞானமன்றத்தினால் நடாத்தப் படும் சைவத் தமிழ்ப்பள்ளியில் பயிலும் 600வரையிலான மாணவர்கள் சிறந்த நற்போதனை பெற்று வருகிறார்கள். நல்ஒழுக்கமே சமயத்தின் ஆரம்பப்படி நல்ஒழுக்கம் உள்ளவர்களே சிறப்பான வாழ்வை அமைத்துக்கொள்வார்கள். மன்றத்தின் சமய பாட போதனைகளில் மிக முக்கியமானது பிள்ளைகளை நல்லவர்களாக உருவாக்குவதே.

மன்றத்தில் 16 நற்போதனைக் குருமார் சைவத்தையும் தமிழையும் கற்றுக் கொடுத்து நற்போதனை அளித்து வருகிறார்கள். 4 வயதிலிருந்து 20 வயது வரையிலான மாணவர்கள் நற்போதனை பெற்று வருகிறார்கள். பதின்மூன்று வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் தொண்டர் சேவைக்கான பயிற்சி நெறிகளைப் பயில்கிறார்கள். இவர்கள் எதிர்காலத்தில் பலவிதமான சமூக செயல்பாடுகளில் தொண்டர்களாகச் செயல்பட உள்ளார்கள். 2000ஆம் ஆண்டு சித்திரை மாத இறுதியில் மாணவர்கள் எல்லோருக்கும் சமய கலாச்சாரச் சீருடை வழங்கப்பட உள்ளது. ‘உண்மை, சேவை, பணிவு’ என்ற செயல்பாட்டில் சிறுவர்களுடைய மனம் பக்குவநிலைபெற வழி கிடைக்கிறது. இவர்கள் நல்ல தொண்டர்களாக இறைவனின் ஆசீர்வாதம் பெற்று சிறந்த வாழ்வைப் பெறும் பாக்கியசாலிகளாக உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

இறைவனே தொண்டரில் அடக்கம் என்று ஔவையார் பாடியுள்ளார். எனவே தொண்டு செய்யும் சிறுவர்களோடும் இறைவன் இருப்பதை அறியலாம். எமது மன்றத்தின் சிறந்த தொண்டராகச் செல்வி கலைவாணி கருணானந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் பெண்கள் பிரிவிலும் முதன்மை வகிக்கின்றார். அடுத்ததாக ஆண்கள் பிரிவில் சிறந்த தொண்டராக செல்வன் ஜெகந்தன் ஜெகதாஸ் தெரிவாகியுள்ளார்.

மற்றும் சிறந்த தொண்டர்களாக தெரிவாகிய மாணவர்கள்

பெண்கள் பிரிவில்

செல்வி சரண்யா மோகன்
செல்வி கீர்த்தனா செல்வராஜா
செல்வி லௌஷா கிருபாகரன்

ஆண்கள் பிரிவில்


செல்வன் பிரதீப் ஜெகதாஸ்
செல்வன் தர்சன் ஸ்ரீகிருஷ்ணராஜா
செல்வன் பிரபாகரன் திருநாவுக்கரசு
செல்வன் கோடீஸ்வரன் யோகநாயகம்
செல்வன் கேதீஸ்வரன் யோகநாயகம்
செல்வன் விக்கினேஸ்வரன் யோகநாயகம்
செல்வன் சரஞ்சன் பத்மநாதன்
செல்வன் சயந்தன் மகேசன்
செல்வன் சாரங்கன் மகேசன்
செல்வன் சஜீபன் ஸ்ரீகிருஷ்ணராஜா


99ல் திறமையான மாணவர்களாகத் தெரிவாகியுள்ளோர்

செல்வி ஆரணி முருகானந்தன்
செல்வி ஜனனி இராசநாதன்
செல்வி கோபிசங்கர் ராசநாயகம்
செல்வி கீர்த்திகா ராசநாயகம்
செல்வன் துபாகரன் சோதிலிங்கம்
செல்வன் குகநீதன் சண்முகேஸ்வரன்
செல்வன் மகிந்தன் மாணிக்கவாசகர்
செல்வன் ஜிசன் யெயகாந்தகுமார்
செல்வி சோபிதா யெயகாந்தகுமார்


இவர்கள் மாதாந்தப் பாடத்திட்டத்தின் மூலம் சித்தி பெற்றோராவார்

வேதாந்த ஞான மன்ற பாடத்திட்டத்தின் மூலம் திறமைச்சித்தி பெற்ற மாணவர்கள்


ஆரணி முருகானந்தன்



துபாகரன் சோதிலிங்கம்



கீர்த்திகா ராசநாயகம்



கோபிசங்கர் ராசநாயகம்


சோபிதா யெயகாந்தகுமார்


ஜனனி இராசநாதன்


குகநீதன் சண்முகேஸ்வரன்


மகிந்தன் மாணிக்கவாசகர்


ஜிசன் யெயகாந்தகுமார்

ஆரோக்கிய வாழ்வு

இயற்கை வைத்தியமும் உடல்நலமும்

- சுவாமி சிவானந்தர் அருளியது. -

1. வலிகள் என்று நீங்கள் உணரும்போதெல்லாம் மருத்துவரைத் தேடி ஓட வேண்டாம். நீங்களே உங்களை உங்களின் முதிர்ந்த மருத்துவராகத் தகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இயற்கையின் குணப்படுத்தும் தன்மைகளைப்பற்றி கொஞ்சம் கற்றுக்கொள்ளுங்கள். இயற்கையின் குணப்படுத்தும் தன்மைகள் மருத்துவச் செலவுகளில் இருந்து உங்களைக் காப்பாற்றும்.

2. ஒவ்வொரு முறை மருத்துவமும் ஏதேனும் குறைகளையோ, பின்னடைவுகளையோ கொண்டுள்ளன. ஆனால் இயற்கைவழி மருத்துவமுறை ஒப்பிட்டுக் கூற இயலாதபடி சிறந்து நிற்கிறது. ஏனெனில் இயற்கை யன்னை இங்கே அன்புடன் தகுதியுள்ள ஒரு மருத்துவராக இயங்கிவருகிறாள். எந்த ஒரு வெளிப்பொருளும் இந்த முறையில் இயற்கையின் தூதுவர்களே இதில் பயன்படுத்தப்படுகிறார்கள். இயற்கை வைத்தியம் ஒரு தெய்வீகமுறை சிகிச்சை ஆகும்.

3. நோய்களைப் பற்றி கவர்ச்சிகரமாக எந்தப் பேச்சும் ஒரு வாரத்திற்குப் பேசப்படாமல் இருக்க துணைச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் மக்களின் பொதுஉடல்நலம் நிச்சயம் முன்னேற்றம் அடையும்.

4. உண்ணாவிரதம் சிறந்த உடல்நலத்தையும், நெடுநாள் வாழும் தன்மையையும் வழங்குகிறது. அது உள்உறுப்புகளுக்கு தொய்வைக் கொடுக்கிறது. பாதுகாப்பு விதியாகவும், குணப்படுத்தும் விதியாகவும் இருக்கிறது. ஏகாதசி அன்று உண்ணாவிரதத்தைக் கடைப்பிடியுங்கள்.

5. உண்ணாவிரதம் உயர்தரமான மருந்தாக இருக்கிறது. அது பல நோய்களை குணப்படுத்துகிறது. ஆகவே ஏகாதசி தினத்தன்றாவது உண்ணாமல் இருங்கள்.

6. எல்லா முறைகளும் தோல்வியடையும்போது உண்ணாவிரதம் எண்ணிக்கையற்ற நோய்களுக்கு உடல்நலத்தை மீட்டுத்தருகின்றது.

7. உண்ணாவிரதத்தை பழச்சாறு அருந்தி நிறுத்திக் கொள்ளுங்கள். 2 அல்லது 3 ஆரஞ்சுப் பழங்களின் சாறு அருந்துங்கள். இவை கிடைக்காவிடில் கரட் சாறு அருந்தலாம்.

8. எப்போதும் மனமகிழ்வோடு இருங்கள். தெய்வத் தன்மை வாய்ந்த நற்பண்புகளையும், உள்ளார்ந்த ஆற்றலையும் வளர்த்துக்கொள்ளுங்கள். சுயநலம் இல்லாத சேவையில் மகிழ்ச்சி கொள்ளுங்கள். நன்றாக உறங்குங்கள். நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்யுங்கள். நல்ல காற்றோட்டமான அறையில் வாழுங்கள். உறங்குங்கள். அதிகாலையில் குளிர்நீரில் குளியுங்கள். இரவில் தாமதமாக படுக்கைக்கு செல்வதையும், உணவு உண்பதையும் தவிர்த்துவிடுங்கள். நீங்கள் எந்த மருத்துவரிடமோ, பல் வைத்தியரிடமோ, எக்ஸ்ரே நிபுணரிடமோ போகத் தேவையில்லை. நீங்கள் சிறந்த உடல்நலத்தையும், சமநிலையையும், அமைதியையும், நிலைத்த வாழ்வையும் அனுபவிப்பீர்கள்.

9. இயற்கையோடு இயைந்து வாழுங்கள். கீரை வகைகளையும் மருத்துவத் தாவரங்களையும், உபயோகப்படுத்துங்கள். சூரியன், காற்று, தண்ணீர், மண், உண்ணாவிரதம், மருந்துச் செடிகள் போன்றவற்றை நீங்களே உங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இயற்கை மருத்துவத்தில் உண்ணாவிரதம்

1. பொது:- குணப்படுத்தும் நடவடிக்கைகளில் உண்ணாவிரதம் மிகப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்தது. குறுகிய கால உண்ணா விரதங்கள் மூன்று நாட்கள் வரையிலும் எந்தவித நிபுணர்கள் உதவியின்றி இருக்கலாம். சிறிய பிணிகளுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் போதுமானது. நீண்டநாள் உண்ணாவிரதம் நாள்பட்ட நோய்களைக் குணப்படுத்த அவசியமாகலாம். இந்த இயற்கை வைத்தியச் சிகிச்சையில் 'எனிமா' என்னும் குடல்வாய் வழி மலக்குடல் கழுவும் முறையைத் தினமும் உபயோகப்படுத்தி மலக்குடலை சுத்தம் செய்யவேண்டும்.

2. உண்ணாவிரதத்திற்கு விளக்கங்கள் (வழிகாட்டுதல்)

ஒருநாள் உண்ணாவிரதத்துக்கு எலுமிச்சை, ஆரஞ்சுசாறு தண்ணீரில் கலந்த ஒருநாளைக்கு 3 அல்லது 4 தடவை அருந்தலாம்.

அடுத்த இரண்டு நாட்கள் மூன்று முறை, கிடைக்கக்கூடிய பழங்களை (வாழைப்பழம் நீங்கலாக) மட்டும் உண்ண வேண்டும். தண்ணீருடன் கலந்து ஆரஞ்சு எலுமிச்சைச் சாறு அருந்துங்கள்.

அடுத்த நான்குநாட்கள், மேற்கூறப்பட்ட பழங்களுடன் 1 அல்லது 2 கோப்பை பால் ஒவ்வொரு உணவுக்குப் பின்னும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்த விதமாக, சில நாட்பட்ட நோய்களுக்கு பொதுவான சிகிச்சை பின்வருமாறு:-

உண்ணாவிரத நாட்கள்	பழவகை உணவு	பால் பழங்கள்	மொத்தம்
1. 1 நாள்	2 நாட்கள்	3 நாட்கள்	1 வாரம்
2. 2 நாட்கள்	4 நாட்கள்	6 நாட்கள்	2 வாரங்கள்
3. 3 நாட்கள்	6 நாட்கள்	12 நாட்கள்	3 வாரங்கள்

இதுபோன்று, மேற்குறிப்பிட்டபடி, நோயாளி உண்ணும் உணவை மேற்கொள்ளவும். இரவில் பாலும் பழமும் எவ்வளவு நாள் முடியுமோ அவ்வளவு நாட்கள் மேற்கொள்ளலாம்.

வெளிச்சிகிச்சை:- குளிர் சாதனப் பை (ஐஸ் நிரப்பிய ரப்பர் பை) மூலம் உடலில் வலி உள்ள பகுதிகளில் ஒத்தடம் கொடுக்கலாம். தாங்கமுடியாத வலிகளுக்கு கொதிநீர் ரப்பர் பைகளைக் கையாளலாம்.

உண்ணாவிரதங்களும் அவற்றின் முக்கியத்துவமும்

மனிதனின் முதற்கடமை, இறைவனை உணர்வதற்காகத் தியானம் மேற்கொள்வதாக அமைகிறது. இதற்கு ஆரோக்கியமான உடலும் உள்ளமும் மிக முக்கியமானவை. சிறந்த நிலையில் உடல்நலத்தை வைத்திருக்க உண்ணாவிரதங்கள் மிகப்பெரிய உதவி புரிகின்றன. முடிந்தவரை முன் எச்சரிக்கையுடன் உணவு உண்பதைக் கடைப்பிடித்தாலும், தவறுகளைத் தவிர்ப்பது மிகவும் கடினமானதாகும். மிகப்பெரிய கட்டுப்பாடுள்ள ஒரு மனிதன் உணவு உண்பதில் மிதமாக இருக்கமுடியும். ஆனால் வேறுபல காரணங்கள் இருப்பதை அவன் தவிர்க்க இயலாது. எனவே அவனுடைய உடல்நல ஆற்றல் சிதைந்து பழுதடைகிறது.

உடலில் நோயின் சிறிய அறிகுறிகள் காணப்பட்டாலும் 1 அல்லது 2 நாள் உண்ணாவிரதம் இருக்க அது ஒரு எச்சரிக்கை ஆகும். விலங்கினங்கள் நோய்வாய்ப்பட்டால் இயற்கையாக உண்ணா விரதத்தையே சார்ந்துள்ளன. அவை இயற்கையின் மூலமாகவே உதாரணமாக, சூரியன், தூயகாற்று, உண்ணாவிரதங்கள் மற்றும் ஓய்வு மூலம் குணப்படுத்திக் கொள்கின்றன.

சளிப்பிடித்தல், தலைவலி, லேசான காய்ச்சல், லேசான இருமல், மலச்சிக்கல் இவை நோய்களின் சில அறிகுறிகள், இவற்றை துவக்கத்திலேயே உதாசீனம் செய்தால் கவலையுறத்தக்கதாக உருவெடுத்துவிடும். இந்த அபாய அச்சுறுத்தலை தவிர்த்து, நம்முடைய சாஸ்திரங்கள், ஏகாதசி, பிரதோசம், சிவராத்திரி, பூர்ணிமா, அம்மாவாசை, நாட்களிலும் வாரத்தில் குறிப்பிட்ட நாட்களிலும் குறிப்பிட்ட தெய்வங்களின் கோபத்தைத் தணித்து அமைதிதப்படுத்தவும் உண்ணாநோன்பு இருக்கவேண்டுவதை

வற்புறுத்திக் கூறுகின்றன. ஒருவன் இந்த ஏதாவது ஒரு நாளில் உண்ணாநோன்பைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இந்திய நாட்டில் ஜாதகத்தின்படி பழக்கப்படுத்திக்கொண்டவர்கள். சிலர் இருக்கிறார்கள். அவர்கள் வாரத்தில் ஒரு நாளில் தங்களுடைய அலுவல்களில் சௌகர்யங்களுக்கு ஏற்றாப்போல் உண்ணாவிரதத்தைக் கடைப்பிடிக்கலாம்.

இன்றைய சூழ்நிலையில் பயிற்சி இல்லாமல் தண்ணீரைத் தவிர வேறெதும் எடுத்துக்கொள்ளாமலேயே உண்ணாநோன்பு மேற்கொள்வது மிகக் கடினமானதாக உள்ளது. எனவே நாம் சிறந்த வழிமுறையாகிய ஓரிரண்டு பழச்சாறுகளை நிறைந்த அளவு தண்ணீருடன் அருந்துவதைப் பின்பற்ற வேண்டும். இந்த நாட்களில் கெட்டியான உணவையோ பழங்களின் சுளைகளையோ எடுத்துக்கொள்ளக்கூடாது. இவ்வகையான உண்ணாநோன்பு உடல்நலத்தைப் பாதுகாக்க சிறந்ததாக அமைகிறது.

இம்மாதிரி, பலநோய்களுக்கு உண்மையிலேயே உண்ணாவிரதம் மூலம் குணப்படுத்த முடியும் சிகிச்சை மிகவும் விரைந்து குணப்படுத்தும் பிரதிநிதியாக உள்ளது. அது வயிற்றுக்கு ஓய்வு கொடுத்து நச்சுப்பொருள்களை உடலிலிருந்து வெளியேற்றுகிறது. உடலைச் சுத்தம் செய்து சக்தி உடையதாக ஆக்குகிறது. பல நோய்களை அது குணப்படுத்த இயலும். நீண்டநாள் உண்ணாநோன்பு மேற்கொள்ள மிகுந்த அக்கரை தேவைப்படுகிறது. உண்ணா நோன்பை நிபுணர்களின் வழிப்படுத்தலுடன் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் உண்ணா நோன்பு மேற்கொள்பவர்கள் தவறுதலுக்கு உட்பட்டால் நன்மையைக் காட்டிலும் மிகுந்த கேடுகள் விளைவதற்கு ஏதுவாகும். இரண்டு அல்லது மூன்று நாள் உண்ணாநோன்பு நிபுணர்களின் வழிகாட்டுதலின்றி கடைப்பிடிக்க இயலும். ஆனால் உண்ணாநோன்பு மேற்கொள்ளும் சமயம் தினமும் மலக்குடல் கழுவுதல் தேவைப்படுகின்றது.

குறுகிய கால உண்ணா நோன்பு நடைமுறை:- முதல்நாள் ஆரஞ்சு அல்லது எலுமிச்சை சாறு ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து 2 அல்லது 3 முறைகள், இரண்டாம் நாள் அதுபோல் 3 அல்லது 4 முறைகள். 3ஆம் நாள் முன் சொல்லப்பட்டதுபோல் ஒரு கோப்பை பாலுடன் மதியமும், படுக்கைப் போகுமுன்னும் அருந்தலாம். 4ஆம் நாள், நீங்கள் அரிசிச் சோறும், பாலும் காலை உணவாக உண்ணலாம். அத்துடன் கனிந்த பழங்களை மாலை உணவுடனும் ஒரு கோப்பை பால் படுக்கைக்குப் போகுமுன்னும் உண்ணலாம். 5ஆம் நாள், நீங்கள் வழக்கமாக உண்ணும் ரொட்டி, பருப்பு வகை மற்றும் காய்கறிகளை உண்ணலாம்.

சுயகட்டுப்பாடு மிகவும் பின்னடைந்திருக்கும் இந்தக் காலத்தில் பழச்சாற்றில் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பது மிகவும் நன்மை தருவதும், சௌகர்யமும் ஆகும். பலருக்கு இது கடினமாக இருக்கும். ஆகவே அரைநாளாவது இதை மாறாமல் அனைவரும் கடைபிடிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் காலையிலும், மாலையிலும் அவற்றை அருந்த வேண்டும். வழக்கமான உணவை சூரியன் மறைவுக்கு முன் உண்ண வேண்டும். அல்லது அவர்களின் வழக்கமான உணவை காலையிலும், சமைக்கப்பட்ட உணவை மாலையில் உண்ணாமல் தண்ணீர் கலந்த பழச்சாறு மட்டும் அருந்தவேண்டும். படிப்படியான பயிற்சிகளால் வாரம் ஒரு நாள் எவ்விதமான, திடமான உணவும் சேர்க்காமல் உண்ணாநோன்பு இருக்க அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஒருவாரம் முழுவதும் உண்ணாமல் இருப்பது உடலை மட்டும் சுத்தப்படுத்துவது மட்டுமல்லாமல் நிறைந்த சக்தியையும், ஆற்றலையும், தெய்வப்பற்று மற்றும் ஆன்மீக வலிமையையும் நமக்குக் கொடுக்கின்றது. ஆகவேதான், ஸ்ரீஇராமன், கிருஷ்ணன், துர்க்கை, சிவன் ஆகியோரின் நவராத்திரியின் சிறப்பையும், மதிப்பையும் பற்றி சாஸ்திரங்கள் புகழ்ந்து பேசுகின்றன. மத்தியதர வகுப்பினர் பழச்சாற்றை மட்டும் சார்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்வதில் பாதியையாவது அவர்கள் மேற்கொண்டால் அவர்களின் இன்னல்களிலிருந்தும் மருத்துவச் செலவுகளிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள். டீயையும், காப்பியையும் உண்ணா விரத நாட்களில் மட்டுமல்லாது முடிந்தால் அதன் பின்னரும் தவிர்த்து விடவேண்டும்.

செரிமானம் இல்லாமைக்கு மாற்று மருந்து

1. தேங்காய் உண்பதால் அஜீரணம் ஏற்படுமானால் சிறிதளவு அரிசிச்சோறு அதைக் குணப்படுத்தும்.
2. மாங்காய் தின்றால் அஜீரணம் ஏற்பட்டால்

பால்குடிப்பதால் குணமாகிறது.
3. மிகுதியாக நெய் உபயோகித்தால் ஏற்படும் அஜீரணத்தை எலுமிச்சைச் சாறு உபயோகிப்பதால் குணப்படுத்தலாம்.
4. வாழைப்பழம் உண்பதால் அஜீரணம் ஏற்பட்டால் அது சாம்பார் உப்பு உபயோகித்தால் குணமாகும்.
5. பருப்பு தானிய வகைகளால் ஏற்படும் அஜீரணம் சிறிதளவு சர்க்கரை உண்பதால் குணமடைகிறது.
6. கேக்குகள் சாப்பிட்டால் ஏற்படும் அஜீரணம் சுடுதண்ணீர் குடிப்பதால் குணமாகிறது.
7. பால் குடிப்பதிலிருந்த உண்டாகும் அஜீரணம் கடைந்த அல்லது திரண்ட பால் அருந்துவதால் அழிக்கப்படுகிறது.
8. குடிதண்ணீரால் ஏற்படும் அஜீரணம் சிறிதளவு தேன் சாப்பிடுவதால் குணப்படுத்தப்படுகிறது.
9. சீமை வாதாம்பருப்பு சாப்பிட்டால் உண்டாகும் அஜீரணம் நிறையத் தண்ணீர் குடிப்பதால் அழிக்கப்படுகிறது.
10. பலாச்சுழை சாப்பிட்டால் ஏற்படும் அஜீரணம் வாழைப்பழம் உண்பதால் குணப்படுத்தப்படுவதாக உள்ளது.

ஆரோக்கிய வாழ்வின் அறிவு

- அடியார் விபுலானந்தா -

நோய் இல்லாத வாழ்வு சிறப்பானது. எல்லோரும் ஆரோக்கியத்தோடு வாழவேண்டும் என்று விரும்புகின்றோம். ஆனால் நோய்கள் நம்மை நோக்கி வருகின்றன. உண்மையில் நோய்கள் எம்மை நோக்கி வருகின்றனவா, அல்லது நாம் நோயை வரவழைக்கின்றோமா?

நாம்தான் நோயை வரவழைக்கின்றோம். ஏனென்றால் நாம் உடல் ஆரோக்கியத்தைக் கவனிக்காமல் இருப்பதால் நோய் எம்மை நோக்கி வருகின்றது. இறைவன் எங்கள் உடலை மிகவும் நுட்பமாகவும் சிறப்பாகவும் படைத்து எங்களைக் காத்து வருகின்றார். உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்குச் சிறந்த வழிகளைத் தந்திருக்கின்றார். இதை அறிந்து வாழவேண்டியது எமது பொறுப்பு.

இந்த மானுட வாழ்வில் நாம் முதலில் தேடவேண்டிய செல்வம் ஆரோக்கியம் எனும் பெரும் செல்வம். ஆரோக்கியமுள்ள மனிதனே ஆனந்தமாக வாழமுடியும். ஆரோக்கியமுள்ள மனிதனே ஆன்மீக சாதனை செய்யமுடியும். நாம் எப்போதும் எமது தேகத்தை நல்ல நிலையில் வைத்திருக்கப் பழகவேண்டும். இந்தக் காலத்திலே மக்கள் சிந்திக்கப் பஞ்சிப்படுகிறார்கள். வாழ்க்கையைச் சுலபமாக்கப் பார்க்கிறார்கள். ஆரோக்கியத்தின் முக்கியத்தை அறியாமல் பணம் இருந்தால் ஆரோக்கியத்தை விலைக்கு வாங்கிவிடலாம் எனும் குருட்டு உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வைத்தியம் என்பது புனிதமான சேவை. ஆனால் இன்று வைத்தியம் என்பது மிகச் சிறந்த வியாபாரம் ஆகிவிட்டது. நவீன விஞ்ஞானம் வைத்தியத் துறையை பணம் பறிக்கும் துறையாக மாற்றிவிட்டது. மக்களை மிகச் சிறந்த முறையில் ஏமாற்றுகிறது. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் அதிகரிக்க அதிகரிக்க மனிதகுலம் ஏமாற்றப்படுகிறது. இரசாயன விஞ்ஞானம் மனிதகுலத்துக்கு மிகப்பெரிய கேட்டுக்கு வழிவகுக்கின்றது. மருந்து மாத்திரைகள் வயதானவர்களை நடைப்பிணமாக்கி வைத்திருக்கிறது.

நவீன விஞ்ஞானிகள் மனித குலத்தின் எதிர்காலத்தைச் சிந்திக்காமலும் மக்களின் நல்வாழ்வைப்பற்றிய உணர்வு இல்லாமலும் தமது அறிவாற்றலால் புதிய கண்டுபிடிப்புக்களை அறிமுகப்படுத்தி தமது பேரையும் புகழையும் பணவசதியையும் பெற நினைக்கிறார்களே தவிர, மனித இனம் இந்த இரசாயனக் கண்டுபிடிப்புக்களால் மிகப்பெரிய கேட்டை எதிர்நோக்குகின்றது என்பதை இந்த நவீன விஞ்ஞானிகள் அறிவதில்லை. மனித இனத்தை சிறிது சிறிதாக அழிக்கின்ற இந்த இரக்கமற்றோரின் கண்டுபிடிப்புக்களின் மூலம் பணம் சம்பாதிக்க பணத்துக்காக ஏப்பம்விடும் பணக்கார முதலைகள் போட்டி போட்டுக்கொண்டு முண்டியடிக்கின்றன. இந்த மூடர்களான நவீன விஞ்ஞானிகளால் தாவர இனங்களும் சீரழிக்கப்படுகின்றன.

இப்போது மரக்கறிகள், பழங்கள் எல்லாமே இயற்கை வாசனை இழந்து, சுவை இழந்து உருவத்தை மட்டும் காட்டி நிற்கின்றன. இந்த நவீன விஞ்ஞானிகள் இயற்கையை அழிப்பதற்காகவே தங்களுடைய அறிவைப் பயன்படுத்துகிறார்கள். உணவின் மூலம் இரசாயனம் எனும் விஷம் மக்களுக்கு ஊட்டப்படுகிறது. இந்த பேராசை கொண்ட நவீன விஞ்ஞானிகளான மூடர்கள் மனித இனத்தின் ஆரோக்கியத்தைச் சிறிது சிறிதாகச் சீரழிக்கிறார்கள்.

விட்டில் பூச்சிகள் விளக்கு வெளிச்சத்துக்கு மயங்கி விளக்குத் தீயில் தமது உயிரை மாய்த்துக் கொள்வதுபோல் மக்கள், வெளிக் கவர்ச்சிக்கு மயங்கி தமது விலை மதிக்கமுடியாத ஆரோக்கியத்தைச் சிறிது சிறிதாக இழந்து வருகிறார்கள். நவீன இரசாயன விஞ்ஞானம் மனித குலத்துக்கு உதவுவதுபோல மனித குலத்தைச் சிறிது சிறிதாகச் சீரழிவுக்குள் தள்ளிக்கொண்டு செல்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் மிகப் பெரிய கேட்டுக்குள் கொண்டுசெல்கிறது. பணப்பேராசை கொண்ட மூடர்கள் இந்தத் துறையிலே தமது பணம் சம்பாதிக்கும் பேராசையால் தர்மசிந்தையை இழந்த நிலையில் மனித குலத்தின் பயங்கரமான அழிவுக்குக் காரணமாகின்றார்கள்.

இறைவன் மனிதர்களுக்காகப் படைத்த அரிய மூலிகைகளைப் பற்றிய அறிவு அருகிவிட்டது. எந்த விதக் கெடுதலும் இல்லாமல் நோய்களும் நீங்கி ஆரோக்கியமாக வாழும் வாழ்வுக்கு மூலிகைகள் முக்கிய பங்கு வகிப்பதை அறியாமல் வாழ்கிறோம்.

விவசாயம் எனும் புனித தொழிலில் பணப்பேராசை புகுந்து, இரசாயனத்தால் பயிர்களின் இயற்கைத் தன்மை அழிக்கப்பட்டு வருகின்றது. உணவுப்பயிர்களிலே இயற்கைத் தன்மை கெட்டுக்கொண்டு வருகின்றது. இன்றைய நவீன(மூட) விஞ்ஞானத்தால் விளைந்த உணவுகளை உட்கொள்வதால் அதனோடு சேர்ந்து எமக்கு இரசாயன விஷமும் எமது உடலுக்குள் சென்று எமது உடலின் இயற்கையின் செயல்பாட்டைக் கெடுத்து வருகின்றது.

புகழுக்கும் பணத்துக்கும் பதவிக்கும் அடிமைகளான அரசியல்வாதிகள் இந்த இரசாயனக் கலப்பால் மனிதகுலத்தின் இயற்கையான ஆரோக்கியம் கெட்டுக்கொண்டு வருகின்றது எனும் உண்மையை உணர்ந்தும் மூடர்களாக சனநாயகம் எனும் போர்வையில் அரசியல் நடாத்துகின்றார்கள்.

இன்றைய நவீன(மூட) விஞ்ஞானம் 'பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலை ஆட்டுவது' போல் மக்களின் ஆரோக்கியத்தைக் கெடுக்கப்பண்ணி அதற்குப் பரிகாரம் தேடுவதற்கு ஆராய்ச்சி நடத்தி மேலும் மேலும் மக்களின் இயற்கையான ஆரோக்கியத்தைக் கெடுக்கிறார்கள். மனித இனத்தைச் சிறிது சிறிதாகச் சீரழித்துக் கொண்டிருக்கும் நவீன மருத்துவத்தின் பிடிக்குள் சிக்கிக்கொள்ளாமல் நாம் தப்ப வேண்டும். எமது உடலின் செயல்பாடுகளை அறிந்து, ஆரோக்கியத்துக்குத் தேவையான வழிகளை அறிந்து வாழ்ந்தோமானால் நாம் நீண்டகாலம் மகிழ்ச்சியோடு வாழலாம்.

சுத்தமான காற்று, சூரியவெளிச்சம், நல்லகுடிநீர், உடற்பயிற்சி, நீண்டதூரம் வேகமாக நடத்தல், தேவையான ஓய்வு, கட்டுப்பாடான தூய உணவுப்பழக்கம், இவை ஆரோக்கியத்திற்கு மிக மிக முக்கியமானவையாகும். உடல் ஆரோக்கியத்தோடும் பலமோடும் இருப்பவர்களுக்கு நோய் வருவதில்லை. ஆரோக்கியவழிகளை அறியாமல் வாழ்பவர்களுக்குத் தான் நோய்கள் வருகின்றன.

பல ஆயிரக்கணக்கான மருந்து மாத்திரை வகைகள் இருப்பதால் மருத்துவர்கள் சிலவேளையில் மருந்து மாத்திரைகளை மாறிக் கொடுத்துவிடுகின்றார்கள். இதனால் பலர் மரணமடைந்திருக்கின்றார்கள். வைத்தியர்களை நம்பாமல் தனது ஆரோக்கியத்துக்கான வழிகளை அறிந்து வாழ்பவர்களே புத்திசாலிகளாவர். 'தனக்குத் தானே வைத்தியன்' என்றொரு உண்மை மொழி உண்டு. தன்னுடைய உடல் நலத்துக்கு தேவையான வழிகளை அறிந்து, தேவையான போது பக்கவிளைவுகளைத் தராத மூலிகை மருந்துகளைப் பாவித்து நீண்டகாலம் சுகமாக வாழப் பழகியவர்கள் தமக்குத் தாமே வைத்தியராவர்.

அறிந்த அறிவோடு வாழ்பவர்கள் சிறப்போடு வாழ்வார்கள். அறியாமல், அறியாமையால் தமது சிறப்பான வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்கின்றார்கள். ஆரோக்கியமான வாழ்வு, அமைதியான வாழ்வு மகிழ்ச்சியான வாழ்வு, எமது கைகளில் தான் உள்ளது.

அறிந்தால் அறிவைப் பெறலாம். அறிவோடு வாழ்ந்தால் விதியை மாற்றலாம். நல்லதைக் கேட்க விரும்பாதவர்களும், நல்லதைப் படிக்க விரும்பாதவர்களும், நல்லதை அறிய விரும்பாதவர்களும் நவீன மூடர்களின் பணப்பேராசைக்குள் சிக்கிச் சீரழிவார்கள். உண்மையை அறிந்தவர்கள் தம் வாழ்வை உயர்த்திக் கொள்வார்கள். பிறருடைய வாழ்வையும் உயர்த்துவார்கள்.

சகல வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியதும் பூரண ஆரோக்கியத்தைத் தரவல்லதுமான அரிய மருந்து எமது உடலில் உற்பத்தியாகின்றது.

இறைவன் எமது உடலை மிகவும் அற்புதமாகப் படைத்திருக்கிறான். உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கான வழிகளையும் அவனால் அருளப்பட்டிருக்கின்றது. நாம் அதன் வழிகளை அறியாமல் வாழுகின்றோம். எமது வாழ்வுக்கு ஆரோக்கியம் மிக முக்கியமானது. ஆரோக்கியத்துக்கான வழிகளைக் கண்டறிந்த வாழ்பவர்கள் நோயற்ற பெருவாழ்வு வாழ்கின்றார்கள். ஆனால் நவீன மருத்துவ வசதிகளுக்கு ஏமாந்து தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாதவர்கள் மருந்து மாத்திரைகளுக்கு அடிமையாகி அந்த மருந்து மாத்திரைகள் ஏற்படுத்தும் பக்கவிளைவுகளால் நாளுக்கு நாள் உடல் நுண்உறுப்புக்கள் சீர்கெட்டு நடைப்பிணமாகி ஆரோக்கியத்தையும் கெடுத்து, ஆயுளையும் குறைத்து மரணத்தைத் தாமாகவே நெருங்கிக் கொள்கிறார்கள்.

புத்திசாலிகள் ஆரோக்கியவழிகளை அறிந்து மருந்து மாத்திரைகளை நாடாமல் ஆரோக்கியமாகவும், அமைதியான வாழ்வில் இன்பத்தோடு வாழ்கிறார்கள். காட்டிலே மிருகங்கள் மிகவும் ஆரோக்கியமாக வாழுகின்றன. ஆனால் ஆறறிவு படைத்த மனிதனுக்கு இன்று ஆரோக்கியமாக வாழத் தெரிய வில்லை. நவீன விஞ்ஞான வளர்ச்சி மனிதனை இயற்கையின் முக்கியத்தை மறக்கச் செய்கிறது. இதனால் மனிதன் தனது சுயஅறிவைப் பயன்படுத்தாமல் வெளி உலக நடைமுறைக்கு அடிமையாகி சிந்திக்கும் ஆற்றலை இழந்து மயக்கத்தில் வாழுகின்றான். காட்டு மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் ஒரு வைத்தியசாலை கிடையாது ஆனால் அவை யாவும் ஆரோக்கியமாக வாழுகின்றன. இனப்பெருக்கத்தைச் சிறப்பாக நடாத்துகின்றன. ஆனால் மனிதனுக்கு மட்டும் பெரிய பெரிய வைத்தியசாலைகள் மூலைமுடக்குகளில் குடும்பவைத்தியர்களும், மருந்துக் கடைகளும் தேவைப்படுகிறது ஏன்?

புனித மருத்துவத்துறை இன்று மிகப்பெரிய வியாபாரத்துறையாக மாறிவிட்டது. மக்கள் மிக நாகரீகமான முறையில் ஏமாற்றப்படுகிறார்கள். உலகில் அறிவைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றிச் சுரண்டும் கூட்டமே அதிக அளவில் வளர்ந்திருக்கின்றது. இந்த அறிவுக்கூட்டம் மக்களைப் பற்றியோ மக்களின் எதிர்காலத்தைப் பற்றியோ துளிகூடச் சிந்தனை இல்லாதவர்கள். இவர்கள் பேராசையின் முதல்தரமான அடிமைகள், ஈன இரக்கமற்றவர்கள் பணத்தை சேகரிப்பதே பிரதான நோக்கத்தைக் கொண்டவர்கள்.

அரசியல் புனிதமானது. மருத்தும் புனிதமானது. மக்களுக்கு நன்நெறியளிக்கும் சமயம் புனிதமானது. ஆனால் இந்த மூன்று துறைகளுக்குள்ளும் குள்ளநரிக் கூட்டங்கள் பெருவாரியாகப் புகுந்து மக்களை ஏமாற்றிப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். விளைச்சலை அதிகரிக்கும் பேராசையால் உரம் என்கின்ற பேரால் இரசாயன மருந்துகளைப் பயிர்களுக்கு இட்டு மக்களுக்கு உண்ணும் உணவிலே கூட சிறிது சிறிதாக நஞ்சை ஊட்டுகிறது இந்த நவீன விஞ்ஞானமும் பேராசைக் கூட்டமும்.

உலகம் எந்த வகையில் முன்னேறி இருக்கின்றது? மக்கள் முன்பைவிட அதிகமாக ஏமாற்றப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். மக்கள் இந்தக் காலத்திலேதான் அதிக அளவு அமைதி இழந்து ஆனந்தம் இழந்து அல்லல்படுகிறார்கள். நவீன மருந்துவத்தில் மிகப் பெரிய கருவிகள் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் மக்களை நூறு வருடங்களுக்கு மேல்

வாழ வைக்க வழிகண்டு பிடித்திருக்கிறார்களா? ஆனால் பணச்செலவு இல்லாமலே நோய்நொடி இல்லாமல் நீண்டகாலம் வாழக் கூடிய மருந்தை இறைவன் இயற்கையாக எமது உடலின் மூலமாகவே படைத்துத் தந்திருக்கின்றான். அதை முன்னைய மகான்களும் அறிவாளிகளும் பயன்படுத்தினார்கள். ஆனால் நாம் அதை அறியாமல் வாழுகின்றோம்.

எமது உடலில் சுரக்கின்ற சிறுநீரே அமிர்தத்துக்கு ஒப்பான அரிய சஞ்சீவி. 'உறியில் நெய் இருக்க வெண்ணெய்க்கு அலைவது' போன்ற வாழ்வுதான் இன்றைய மனித வாழ்வு. சிறுநீர் அரியமருந்தா? என்று நாம் யோசிப்போம். ஆனால் திருமூலரின் திருமந்திரத்திலே அமுரிதாரணை எனும் அத்தியாத்திலே சிறுநீரை அமிர்தம் என்று விளக்கியுள்ளார்.

சிறுநீரைச் சிவநீர், சிவாம்பு, அமுரி என்று பலவாறு சொல்லப்படுகிறது.

''நூறு மிளகு நுகருஞ் சிவத்துநீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்காள்
தேறில் இதனைத் தெளியுச்சிக் கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயிராமே''

(திருமந்திரம் 827)

தினமும் நூறு மிளகளவு சிவத்திநீரைப் பருகுவார்க்கு மேனி பொன்நிறமாக மாறும். இதற்குமேல் சாவாமருந்தது வேறொன்றுமில்லை. மக்கள் இதை அறிந்து தெளிந்த உச்சியில் அப்பிக் குளித்தால் நரைமயிர் மாறிக் கறுக்குமாம்.

''கரையருகே நின்ற கானல் உவரி
வரை வரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல்லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங்கில்லையே''

(திருமந்திரம் 828)

கொப்பூழ்க் கீழ்க்கரை அருகே உள்ள கானலில் உள்ள உப்பு நீரின் மகிமையை அறியாதார் அதனைக் கழிவு கழிவு என்று வெறுக்கத்தக்கது என்று அறிவில்லாத மக்கள் கூறுவர். ஆனால் முதலில் வருகின்ற பித்தப்பகுதி(சிறுநீர் கழிக்கும் போது முதல்பகுதி கழிவுப் பொருட்களோடு வரும்) யையும் சாரமற்றதான கடைசிப்பகுதியையும் விட்டுவிட்டு நடுப்பகுதியை ஏந்தப் பருக வல்லவர்க்கு நரையும் திரையும் மாறும் இயமன் வருதலாகிய இறப்பும் நெருங்காது நீண்ட காலம் இளமையுடனும் ஆரோக்கியத்துடனும் வாழலாம் என்பதாகும்.

சித்த வைத்திய நூலில்
''அங்கி உவருரு சிறுநீர் வாதம் போக்கும்
அதைப் பருகில் இருமல் இரைப்பு
இரத்த நோயும் பொங்கிவரும் மேக
விகாரம் கிரந்தி புண்கள் போம்
அதை நசியம் புரியில் (மூக்கால் உள் இழுப்பது)
தங்கியதோர் அபஸ்மாரம் சன்னியாசம்
சர்வவிஷம் விஷசுரம் தவருண்டோடும்
இங்கதனைத் தொட்டலம்பில் கண்முகம்
காது இவ்விடத்தில் எழும்
விரணம் இரியும் தானே.''

இலகுவான இந்தச் செய்யுளில் அபஸ்மரம் என்றால் காக்காய் வலிப்பு. சன்னியாசம் என்றால் சன்னி, விரணம் என்றால் கட்டிகள், முகப்பரு, மரு, தேமல், நாவிதன் சொறி, ரணங்கள் என்பன. இரியும் என்றால் குணமாகும்.

மேலும் போகர், அகத்தியர், தேரையர், திருவள்ளுவர் காகபுசுண்டி முதலிய மகான்கள் சிறுநீரின் மகிமையைப் பற்றி செய்யுளாகவும் பாட்டாகவும் எழுதியிருக்கிறார்கள். அவரவர் சிறுநீரே பருகவேண்டும் எனும் விதியும் உள்ளது.

இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறுநீரில் பல முக்கிய பொருட்கள் மட்டுமன்றி பலவிதமான ஹோர்மோன்கள், என்சைம்கள், டைரெக்டின், உரோகினேஸ் போன்ற கிருமிகொல்லிகளும் அடங்கியுள்ளன. பிளவைநோய், இருதயநோய். மூளைநோய் நுரையீரல்நோய் போன்றவையும் குணமாகின்றன எனக் கண்டுபிடித்துள்ளார்கள். அத்தோடு Dr. Fehren, Introduction To Bio-Chemistry எனும் நூலிலே ஆரோக்கியமானவனுடைய சிறுநீரில் உடலுக்குத் தேவையான பத்தொன்பது போஷாக்குத் தத்துவங்கள் அடங்கியுள்ளன என்று கூறுகின்றார். பததொன்பது தத்துவங்களில் ஒன்று யூறியா. இது சிறுநீரில் அதிகமான அளவு காணப்படுகின்றது. 3400 மில்லி கிராம் சிறுநீரில் 1459 மி.கி யூரியா இருக்கின்றது.

யூரியா (நைட்ரஜன்),யூரியா, கிரிய்டினீன (நைட்ரஜன்), கிரிய்டினீன், யூரிக் அசிட்(நைட்ரஜன்),

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

குடும்ப சுகத்தின் சூத்திரம்

- அடியார் விபுலானந்தா -

உறவு என்பது நட்பாகவும் காதலாகவும் பாசமாகவும் ஏற்படுகிறது. நண்பர்களுக்கிடையே ஏற்படும் உறவு நட்பாகவும், பருவ உணர்வுகளால் ஆண் பெண் இருபாலாருக்குள்ளும் ஏற்படும் உறவு காதல் என்றும், குடும்பத்தினரிடையே ஏற்படும் உறவு பாசம் என்றும் சொல்கிறோம். இந்த உறவு முறைகள் களங்கம் அற்றதாக இருந்தால் வாழ்வு செழிப்பாக இருக்கும். ஆனால் இன்று உறவு முறைகள் தாமரை இலையில் தண்ணீர் போல் காணப்படுகின்றது. குடும்ப உறவுக்குள் குறைபாடுகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? ஒன்று எமது கல்விமுறையில் ஏற்பட்ட மாற்றத்தால் குடும்ப வாழ்வின் உறவில் தேவையான வழிகளைப் பெறமுடியவில்லை. அதாவது அன்னியரின் ஆட்சிக்காலத்தில் கல்விமுறை குடும்ப வாழ்வுக்கான நல்வாழ்வுக்கான அறநெறிகளைப் போதித்தகாலம் அவற்றைக் கடைப்பிடிக்கக் கூடிய விதத்தில் மாணவர்களை ஊக்கப்படுத்தவில்லை. அடுத்ததாக பிள்ளைகள் படித்தால் குறைவில்லாமல் வாழ்வார்கள் எனும் நினைப்பில் குடும்பப் பொறுப்புகளைப் பழக்காமல் விட்டதனால் குடும்ப உறவுகள் இல்லாமலும் அன்பு குறைந்தும் காணப்படுகின்றது.

மூன்றாவதாக குடும்ப உறவுக்கான நெறிமுறைகளை சமயத்தின் ஊடாகப் பெறாததாலும் வாழ்வில் மகிழ்ச்சி அற்றநிலை காணப்படும். அந்தக் காலத்துக் கல்வி முறை வாழ்வுக்குத் தேவையான அறநெறிகளை சிறப்பாகப் புகட்டியது. அந்தக் காலத்தில் கற்றோர் சிறப்போடும் ஆனந்தமாகவும் வாழ்ந்தார்கள். ஆனால் இந்தக் காலத்துக் கல்விமுறை பணத்தைத் தேடுவதற்கான தொழில் வளர்ச்சிக் கல்விக்கே முதலிடம் கொடுக்கின்றது. இந்தக் காலத்தில் கல்வி கற்றவர்கள் அறநெறியோடு வாழத் தெரியாமல் வசதிகளைப் பெற்று வாழமுற்படுவதால் உண்மையான சந்தோஷத்தை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தக் குறைபாட்டை உணர்ந்தோமானால் அமைதியையும் ஆனந்தத்தையும் தரும் உண்மையான வாழ்வை வாழ முற்படுவோம்.

சமய வாழ்வுக்கு ஏற்படுத்திய அறநெறிகள் எவை என்பதை நாம் அறியவேண்டும். எல்லாச் சமயங்களும் இல்லறத்தை சிறப்பாக வலியுறுத்துகின்றன. ஆனால் கடவுளையே இல்லற வாசிகளாக அமைந்திருப்பதைச் சொல்லும் மதம் இந்து மதம். சிவன் சக்தி கணவன் மனைவியாகவும் பிள்ளையார் முருகன் பிள்ளைகளாகவும் ஒரு குடும்பமாகச் சித்தரிக்கப்படுகிறது.

கடவுள் உருவம் இல்லாதவர் என்றும் உருவமானவர் என்றும், அருவுருவம் ஆனவர் என்றும் சைவசமயத்தில் கூறப்படுகின்றது. எனவே உருவம் இல்லாத கடவுள் மனித உருவில் வெளிப்படுகிறார். குடும்பத்தை ஒழுங்கு விதியோடு நடாத்தப் பழகியவர்கள் சுகத்தோடும் வளத்தோடும் வாழமுடியும். முற்காலங்களிலே பெரியோர் சொன்ன வழிகளிலே மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் குடும்ப இயக்கத்தை ஒழுங்குபடுத்தி அதை இல்லறம் என்று வகைப்படுத்தினார்கள். இல்லறம் அல்லது நல்லறம் அன்று எனப்படித்துப் படித்து மூளையைச் சூடேற்றிப்பதிய வைத்ததுதான் மிச்சமாக இருந்தது. ஆனால் இல்லம் அறத்தோடு இயங்குகின்றதா? இல்லை அப்படியென்றால் எப்படி வாழ்வில் இன்பம் கிடைக்கும்? எப்படி வாழவேண்டும் என்பதைப் படித்தால் இன்பமாக வாழலாம். ஆனால் படித்தவர்கள் இன்பமாக வாழ்கிறார்களா? அதுவும் இல்லை. ஏனென்றால் படித்தவர்கள் என்ன படித்தார்கள்? பட்டப்படிப்பு தொழிலுக்காக படித்தார்கள். அதனால் பணம் சம்பாதிப்பார்கள். ஆனால் கணவனும் மனைவியும் அன்பாக வாழமுடியவில்லையே. ஒருதரை ஒருவர் நம்பாமல் வாழும் வாழ்க்கை வாழவேண்டியுள்ளது ஏன்? பணத்தால் அன்பையும் நம்பிக்கையும் வாங்கமுடியாது. பணத்தால் வசதிகளை மட்டும் தான் வாங்கமுடியும்? ஆனால் கணவன் மனைவி உறவினால் ஏற்படும் அன்பு அமைதி ஆனந்தம் போன்றவற்றை வாங்கவே முடியாது.

அன்பு அமைதி ஆனந்தம் போன்றவற்றை பக்குவப்பட்ட மனதால் தான் வாங்கமுடியும். பக்குவப்பட்ட மனதைப் பணத்தால் வாங்கமுடியாது. நல்ல அறிவாலும் நல்ல பழக்கத்தாலுமே

வாங்கமுடியும். எனவே வாழ்வுக்கு மிகமுக்கியமான படிப்பு நற்பழக்கமே. இதை விட்டு விட்டு பணத்தால் எல்லாவற்றையும் பெறலாம் எனும் மிகமிக மூடர்களாகவும் வெறும் பட்டப்படிப்பை நம்பி வாழும் முட்டாள்களாகவும் வாழ்வதா? மன அடக்கமும் மனபக்குவமும் பெறக்கூடிய நல்ல போதனைகளை இளமையிலே கற்கவேண்டும்.

தாம்பத்ய உறவுக்கு தயாராகும் இளம் தம்பதிகள் காமசுகத்தின் மகிமையை அதன் சூத்திரத்தை அறிந்து வாழப்பழக வேண்டும். கணவன் மனைவி உறவு பால்உறவில் ஆரம்பமாகிறது. இருவரும் பால்உறவை மெய்மறந்து அனுபவிக்கும்போது கிடைக்கும் இன்பத்தை உச்ச இன்பமாக உணர்கிறார்கள். அந்த இன்ப உணர்வை சிறிது நேரத்தில் இழக்கிறார்கள். இதுவே சிற்றின்பம். இந்த சிற்றின்ப உணர்வை பேரின்ப உணர்வாக மாற்றி இறை உணர்வுக்குள் செல்லமுடியும் என்கிறார்கள் முனிவர்கள்.

கணவன் மனைவி தாம்பத்திய உறவு தெய்வீகமாக அமையவேண்டும். இந்த உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். சைவசமய வணக்கத்தில் சிவலிங்கவழிபாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த லிங்கவடிவமானது ஆண் பெண் உறுப்புக்கள் சேர்ந்திருக்கும் வடிவமே. இரண்டும் சேர்ந்திருக்கும் வடிவத்தை நாம் வணங்குகிறோம். ஆனால் கணவன் மனைவி உடல்உறவில் இணையும்போது இறை உணர்வை உணரப் பழகாது விட்டுவிட்டோம். கணவன் மனைவி உறவு கொள்ளும்போது ஏற்படும் இன்ப உணர்வு தெய்வீகத்தால் ஏற்படுகின்றது. இந்த உணர்வு ஏற்படும்போது இறை தியானமாக மாறப்பழகினால் பெருநன்மை ஏற்படும்.

சிலர் கணவன் மனைவி உறவைத் தூஷணம் என்று எண்ணி சுவாமிப்படத்தை படுக்கை அறையில் வைப்பதில்லை. ஆனால் படுக்கை அறைதான் உண்மையான சுவாமி அறை. அங்கே வாசனை எப்போதும் இருக்கவேண்டும். இருவரும் சிவசக்தி என்பதை உணர்ந்து படுக்கையில் சயனிக்கவேண்டும். இருவரும் காமசுகத்தில் இன்பம் அனுபவிக்கும்போது சிவனும் சக்தியும் தம் உள்ளே இருந்து அந்த இன்ப சுகத்தைத் தந்து தாமும் அனுபவிப்பதாக உணரவேண்டும். இருவரும் காம சுகத்தை வழிபாடாக செய்து கொள்வதாக உணரவேண்டும். இந்த வாழ்க்கை முறையால் கோடிபணத்தால் கிடைக்கும் வசதிகளால் கிடைக்காத இன்பத்தை அனுபவிக்கமுடிகிறது. இந்த இன்பத்தை உணரக்கூடிய தம்பதிகள் வேறு எதிலும் ஆசை கொள்ளமாட்டார்கள். காமசுகத்தில் திருப்தி இல்லாதவர்களும் காமசுகத்தை தெய்வீக இன்பமாக உணரத் தெரியாதவர்களுக்கு அர்த்தமற்ற ஆசை உருவாகிறது. அர்த்தமற்ற ஆசை உருவாகுவது அறிவில்லாத தன்மையைக் காட்டுகிறது. அர்த்தமற்ற ஆசை உருவாவதால் துன்பங்களும் அதிகரிக்கும். வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் துயரங்களை ஆராய்ந்தால் அதற்குக் காரணம் ஆசையே. தம்பதிகள் இருவரும் போதும் என்ற மன உணர்வைப் பெறவேண்டும். சொந்தப் புத்தியில் வாழப்பழகவேண்டும். பிறரைப் பார்த்து வாழும் புத்தி இல்லாத வாழ்வு வாழக்கூடாது. எமக்காக நாம் வாழ்கிறோம் எனும் உணர்வோடு கணவன் மனைவி உறவைப் பலப்படுத்தவேண்டும். மற்றவர்களைப் போல் வாழவேண்டும் எனும் பொய்யான, புத்தி இல்லாத, போக்கில் போனால் இறுதியில் ஏமாற்றம் தான் கிடைக்கும்.

எப்போதும் கடவுள் உங்களோடு இருப்பதாக உணரவேண்டும். சிறுவயதிலே நல்ல குரு அல்லது நல்ல வாத்தியாரிடம் மனஅடக்கத்தைக் கற்றிருப்பீர்களானால் தாம்பத்திய வாழ்விலும் ஒருவரை ஒருவர் நேசித்து வாழும் மனப்பக்குவத்தை உடையவராக இருப்பீர்கள். குடும்ப வாழ்வில் உலகிலேயே நீங்கள் நம்பவேண்டியவர்களும் உற்ற துணையும் கணவன் அல்லது மனைவியே. வாழ்க்கையின் அச்சாணியும் கணவன் மனைவி உறவே என்பதை மறக்காதீர்கள். நீங்கள் இருவரும் குடும்பம் எனும் இல்லறத்தை நடாத்தும்போது அது நல்லறமாக நடைபெறவேண்டும். ‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது’ எனும் திருக்குறள் வாக்கியத்தை நினைவு கூருங்கள்.

படுக்கை அறையைப் புனிதமாக்குங்கள். இறை உணர்வோடு காம இன்பத்தை அனுபவியுங்கள். ‘காம சுகத்தை எனக்கு அர்ப்பணமாகச் செய் அதனால் நானும் இன்பம் அடைகிறேன்.’ என கீதை உபதேசத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூறகிறார். நீங்கள் சிற்றின்பக்

கலவியில் ஈடுபடும் போது உங்களோடு சிவனும் சக்தியும் கூட இருப்பதை உணருங்கள். நீங்கள் அனுபவிக்கும் இன்பத்தை உங்களுக்குள் இருந்து நோக்கரிய நோக்கானவனும் நுணுக்கரிய நுண்உணர்வானவனுமாகிய சிவசக்தி ரூபத்தில் சிவனும், பார்வதியும் அனுபவிப்பதை உணருங்கள். அப்போது உங்கள் படுக்கை அறையும் நீங்களும் தெய்வீக அதிர்வலையால் சூழப்படுவீர்கள். உங்கள் படுக்கை அறையும் நீங்களும் உங்கள் வீடும் தெய்வீக கடாட்சத்தால் புனிதமடையும். அன்பின் வெளி உலக இன்பத்துக்காக அலைக்கழியும் முட்டாள்களையும் போல் அலையமாட்டீர்கள். உங்கள் மனம் திருப்தியுடன் கட்டுப்படும்.

படுக்கை அறையில் தூஷணம் நடைபெறுவதாக நினைப்பது சுத்த முட்டாள்தனம். இது தூஷணம் இது கடவுளால் வெறுக்கப்படுகிறது என்றால் இதை ஏன் செய்கிறீர்கள்? கடவுள் ஏன் இந்த உறுப்புக்களை படைத்தார்.

கடவுள் படைத்த உறுப்புக்கள் இணையும்போது பெறப்படும் இன்பமும் கடவுளே தருகிறார். அத்தோடு அந்த இன்பத்துக்குள்ளும் கடவுள் இருக்கிறார். இதை உணரும் பாக்கியம் பெற்றவர் பேரின்பத்தை அனுபவிக்கும் பாக்கியம் பெறுவார்கள். தாம்பத்திய உறவுக்கும் லிங்கவழிபாட்டிற்கும் அர்த்தம் நேரடியானது.

உறியில் வெண்ணெய் இருக்க நெய்யுக்கு அலைபவர்கள் முட்டாள்களோ இல்லையோ அதேபோல் இன்பமும் தெய்வீகமும் எமக்குள்ளே இருப்பதை அறியாமல் இன்பத்துக்காக அலைகிறார்கள் பலர். உண்மையை அறியாமல் அலைகின்ற மானிடரே உங்கள் வாழ்நாளை வீண்நாளாக்கி மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இன்பத்தை அனுபவிக்கத் தெரியாமல், அன்பாய் வாழத் தெரியாமல் நான்குசுவருக்குள் சண்டையும் சச்சரவுமாக வாழும் மூடர்களே பணத்தாலும் பட்டத்தாலும், பதவியாலும் இன்பமும் அமைதியும் வராது என்பதை மரணத்தின் வாசல் கிட்டும்போது தான் அறியப்போகிறீர்களா? மரணம் உன்னை வந்து விழுங்கும்போது நீ உண்மையை அறியாமல் வாழ்ந்ததை நினைத்து என்ன பயன்? உண்மையை விட்டு உண்மையான அமைதியை விட்டு, உண்மையான இன்பசுகத்தைவிட்டு சுயபுத்தி இல்லாத மூடர்களாக அலைகிறீர்களே, பணம் பணம் என்ற அலைந்து குடும்ப வாழ்வில் அமைதியையும் இன்பத்தையும் அனுபவிக்கத் தெரியாமலும் முடியாமலும் பிரச்சனைகளோடு மரண கயிறை நோக்கிச் செல்லும் மூடரே உண்மையை ஒருகணமாவது உணர்ந்து பொய்யான வாழ்விலிருந்து உண்மையான வாழ்வுக்குத் திரும்புங்கள். சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்தைப் பெறுங்கள். திருப்தியோடு வாழுங்கள். தெய்வீக அருளோடு வாழுங்கள்.

உள்ளங் கவர் கள்வன்

- தொகுப்பு சாந்தி சுயம் -

மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் ஒன்றான திருச்சாழலை இங்கு வாசகர்களுக்கு ஆழ்ந்து அனுபவித்து உணரத் தருகின்றோம். சாழல் என்பது ஒருவகை மாதர் விளையாட்டு. இப் பாடல்கள் அருளப்பட்ட இடம் முக்தித் தலமாகிய சிதம்பரம்.

பதிக வரலாறு:- ஈழநாட்டுப் பௌத்தர்கள், அப்போதிருந்த பௌத்த அரசனுடனும் அவனுடைய ஊமைப்பெண்ணோடும் சிதம்பரத்திற்கு வாதம் செய்ய வந்தார்கள். தில்லை வாழ் அந்தணர் சார்பில் நடராசரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கவாசகர் பௌத்தர்கள் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் பதிலளித்தார். பௌத்தர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நேர்மை தவறித் தர்க்கம் பண்ணிய அவர்கள் ஊமைகளாயினர். இதனைக் கண்டு வியந்த பௌத்த அரசன், ஊமையற்றவர்களை ஊமைகளாக்க முடியுமெனின் ஊமையான தன் பெண்ணையும் ஊமையற்றவளாக்க முடியுமென நினைத்து அவ்வாறு செய்யுமாறு மாணிக்கவாசகப் பெருமானை வேண்டினான். மணிவாசகரும் அப் பெண்ணை அங்கு வரவழைத்து பௌத்தர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்குமாறு பணித்தார். இவ்வாறு தோன்றிய திருச்சாழல் பாடல்களின் முதலிரண்டு அடிகளும் மாணிக்கவாசகர் கேள்வி கேட்பதாயும் அடுத்து வரும் இரண்டு அடிகள் ஊமைப் பெண் பதிலளிப்பதாயும் அமைந்துள்ளது.

இப் பதிகங்கள் வேறு சமயத்தினருக்காக (சிவபெருமானின் பெருமையை அறிய வாய்ப்பில்லாதவர்களுக்கு) அருளியிருந்தாலும் நாமும் பக்தர்களுடைய உள்ளங்களைக் கவரும் சிவபெருமானின் தன்மையை, அவரைப் பற்றி அறியாத சில உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

மாணிக்கவாசக சுவாமிகள்
திருவாசகம்
திருச்சாழல்

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ 3

அயனை அநங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனைவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்த்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்(கு)
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ 6

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ 7

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலால முண்டிலனேல் அன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ 8

தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ 9

தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ 10

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ 11

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ 12

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ 14

கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தா ங்கினான் திருமால்காண் சாழலோ 15

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நீலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக விடவாழி யருளினன்காண் சாழலோ 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமா னுண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ 19

அருந்தவக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ 20

பதிகப் பொருள்

1. தோழி, எம்பெருமான் தன் திருமேனியில் பூசிக்கொள்வது வெண்ணீறு; அணிந்துகொள்வது சீறிவரும் பாம்பு; தன் புனிதத் திருவாயால் பேசுவது மறைபோலும். நீறு பூசியும் மறைபேசியும் நாகம் அணிந்தும் பயன் யாது?

எல்லா உயிர்க்கும் தலைவனாய் அவ்வவ்வுயிரையும் போற்றிப் புரக்கும் தன்மையனாய் நின்றான் என்பதே.

2. என் அப்பனாய் எம்பிரானாய் எல்லார்க்கும் தலைவனாய் இருந்துங் கந்தல்களைத் தைத்துக் கொவணமாய்க் கொள்வது எக்காரணம் பற்றியோ?

நான்மறையே அரைஞாணாய் மெய்ந்நூலுட் பொதிந்த தத்துவப் பொருட்களே கௌபீனமாய்த் தரித்துக் கொண்டான் என்றறிக.

3. ஈசனுக்குச் சுடுகாடே கோயில்; புலித்தோலே ஆடை; அவன் தாயும் தந்தையும் இல்லாதவன்; தனியன். தன்னைப் பிறப்பிப்பார் இல்லாத தனியன் ஆனாலும் அவன் கோபம் கொண்டால் உலகெல்லாம் வெறும் புழுதி ஆம் என்றறிக.

4. பிரமன், மன்மதன், யமன், சந்திரன் ஆகியவர்களை பழிச்சொல் அழியாதபடி வடுச்செய்து தண்டித்தான் இறைவன்.

முக்கண் அப்பனாகிய எம்பெருமானே மனமுவந்து தண்டிப்பானாயின், அதுவே அவர்களுக்கு உண்மையில் பெருவெற்றியன்றோ?

5. யக்ஞேச்வரனை (சிவபிரானை) மதியாது தொடங்கிய யாகத்தை முடிக்கத் துணிந்த தஷனையும் யாகத்தை நடத்தியவனையும் தலைவெட்டிச் சாய்த்தும் யாகத்திற்கு வந்திருந்த தேவர்களை வருத்தி யடக்கியும் என்ன காரியம் செய்தான்!

தேவர்களை அவ்வாறு வருத்தி அடக்கினாலும் பின் அவர்களுக்கிரங்கி அருள் புரிந்ததோடு தஷனுக்கும் ஆட்டுத்தலை கொடுத்து உயிர்பெறச் செய்தருளினான் என்றறிக.

6. பிரம விஷ்ணுக்கள் உணரமுடியாமல் பாதலத்தின் கீழும் அண்டமுகட்டின் மேலும் பரந்து அழற்பிழம்பாய் நின்ற காரணந்தான் யாதோ?

அவ்வாறு பாதலத்திற் கப்பாலும் அண்டமுகட்டிற் கப்பாலும் பரந்து நில்லாவிடின் பிரமவிஷ்ணுக்கள் சினங் காரணமாய்க் கொண்ட அகங்காரம் நீங்கப்பெறார் என்க.

7. மலைமகளாகிய பார்வதிக்கு ஒரு பாகம் கொடுத்ததுமே மற்றொருத்தி (கங்கை) கோபம் கொண்டு தலையிற் பாய்ந்து நிற்பது எதனாலோ?

அவ்வாறு தலையில் பாய்ந்து நில்லாமற் போனால் உலகம் யாவும் பாதலத்தில் அழுந்திப் பெருங் கேடு உண்டாகும். பகீரதன் தவம் வரலாற்றில் உள்ளது.

8. ஆரவாரத்தோடு அலைகடலில் தோன்றிய ஆலகால விடத்தை உண்டான் அவன் திறமைதான் என்னே!

அவ்விடத்தை எம்பிரான் உண்ணாதிருந்திருப்பின் அன்று பிரம விஷ்ணுக்கள் உட்பட எல்லாத் தேவரும் அழிந்திருப்பர் என்க.

9. தென்றிசை நோக்கித் திருநடனமாடும் தில்லைச்சிற்றம்பலத்து ஐயன் தன்னொரு பாகத்தே பெண்ணை விரும்பி, வைத்தக் கொண்ட பெரும்பித்தன் போலும்!

அவ்வாறு ஒரு பாகத்தே பெண்ணை வைத்திலனேல் மண்ணவர் விண்ணடைதற்பொருட்டு யோக நிலையெய்தி விடுவார் இறுதியில் உலக இயக்கம் தடைப்படும்.

10. அந்தமில் பரமன் தன்னை யடைந்த நாயேனாகிய என்னைப் பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்தினான் காண்!

ஆனந்த வெள்ளத்தில் அழுத்திய அவன் திருவடிகள் வானத்துயர்ந்த தேவர்கட்குப் பெறலரும் பெரும்பொருள் என்று உணர்க.

11. பெண்ணே! நரம்பு, ஓடு, எலும்பு, கங்காளம் ஆகியவற்றை விரும்பி அணிந்துள்ளானே; இது என்ன தவவேடம்!

இவை வந்தவாற்றைச் சொல்கிறேன் கேள்; யுகாந்த காலத்திலே பிரம விஷ்ணுக்களை முடித்து அடையாளமாக அவற்றைத் தரித்துக்கொண்டான்.

12. உடுப்பது புலித்தோல்; உண்கலம் கபாலம்; உறைபதிசுடுகாடு; இவ்வாறு இருக்கும் இவனுக்கு ஆட்படுவார் யார்?

இவ்வாறு அவன் இருப்பினும் அவனுக்கு பிரம விஷ்ணுக்களும் இந்திரனும் மற்றுமுள்ள தேவர்களும் வழிவழி அடியார்கள் என்பதுணர்க.

13. இமவான் மகளாகிய பார்வதியை உலகறியுமாறு அக்னி சாஷியாகத் திருமணம் செய்துகொண்டது எக்காரணம் பற்றியோ?

உலகினர் அறியமாறு அக்னி சாஷியாகத் திருமணம் செய்து கொள்ளானேயாகில் உலகெலாம் தடுமாறும்; மெய்ந்நூற் பொருட்கள் யாவும் நிலை மாறிக் கலங்கும் என்க.

14. தேன் ஒழுகும் வயல்கள் சூழ்ந்த தில்லையில் ஆடும் தேவன் தானே வலியச்சென்று ஆலங்காட்டில் ஊர்த்துவ நடனம் புரிந்ததன் காரணம் யாது?

சிவ சைதன்யம் அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதே சிவத்தாண்டவம். அது இல்லையேல் பிரபஞ்சமே சூன்யமாய் விடும்.

15. தோழி, மதயானையும் பாய்குதிரையும் தேரும் விரும்பாது இடபத்தை (காளையை) விரும்பி அதன்மேற் சென்ற காரணத்தை எனக்கச் சொல்வாயாக.

பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் முறையே இயன்ற மூன்று மதில்களையும் சிரித்து எரித்த காலத்தே திருமால் இடப உருக்கொண்டு எம்பிரானைத் தாங்கினான்.

16. அன்று கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து சனகர், சநந்தனர், சநத்குமாரர், சநத்ஸுஜாதர் ஆகிய நால்வருக்கும் வேதத்தின் உட்பொருளை விளங்க உரைத்தான் காண்.

அவ்வாறு அறமுரைத்தான் ஆயினும் மூன்று புரங்களையும் கூட்டாக எரித்தழித்தான்.

17. தோழி, அம்பலத்தில் கூத்தாடி ஐயம் புகுந்து யாண்டும் திரியும் நம்பனாகிய சிவபிரானையும் பரம்பொருளென்று விரும்பியடைதல் யாது காரணம் பற்றி?

கூறுகிறேன் கேள்; இவ்வாறு திரியும் நம்பனைத்தான் வேதங்கள் எல்லாம் 'எம்மால் உணரமுடியாத ஈசனே' என்ற புகழ்ந்து வழிபட்டன.

18. சினமே தன்னியல்பாகக் கொண்ட சலந்தரனின் உடலையழித்த நல்ல சக்கரப்படையை நாரணற்கு அருளியதன் காரணந்தான் யாதோ?

நாராயணன் (ஆயிரம் பூவிற்கொரு பூ குறைந்தமையின்) தன் கண்ணையே பறித்து அருச்சித்தமையால் கொடுத்தான்.

19. தோழி, புள்ளி வாய்ந்த புலித்தோல் ஆடை; ஆலகாலவிடம் உண்ணும் அமுதம்; இவ்விஷயத்தை எம்பெருமான் உட்கொண்ட திறனை எனக்கு எடுத்துச் சொல்வாயாக.

எம்பெருமான் எதை உடுத்துக்கொண்டாலும் எதை உண்டாலும் தன் பெருமையைத் தான் உணராத பெருமையன்.

20. தோழி, எப்பற்றையும் ஒழித்து நின்ற அருந்தவ முனிவர்களாகிய சனகாதியர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை உரைத்தருளிய காரணத்தை எனக்கறியக் கூறுவாயாக.

அவ்வாறு எம்பெருமான் அருளிச் செயாதிருப்பின் சிறந்த தவமுடைய அவர்களுக்கும் உலக நியதி விளங்கியிரா என்பதே யாம்.

திருச்சாழல் பதிகங்களும் அவற்றின் பொருளும் சைவ சித்தாந்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டவை.

குடும்பத்தில் வணக்கமுறையும் தெய்வீக வாழ்வும்

- அடியார் விபுலானந்தா -

இறைவன் எங்களைத் தாய் தந்தையர் மூலமாகவே படைத்தார். எங்களைப் படைப்பதற்கு இறைவன் எமது தாய் தந்தையரைக் கருவிகளாகப் பாவித்தார். எமக்கு மானுட உடலைத் தருவதற்கு இறைவன் எமது தாய் தந்தையரையே பயன்படுத்தினார். எனவே எமது தாய் தந்தையருக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாம் இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கும், இறைவனோடு இணைப்பை ஏற்படுத்துவதற்கும் தாய் தந்தையரே சிறந்த காரணிகளாக உள்ளனர்.

வங்கியில் பணம் கொடுக்கும் இயந்திரங்களில் பணத்தைப் பெறுவதற்கு வாடிக்கைாளர்கள் ஒவ்வொரு அட்டை உண்டு. அந்த அட்டைகள் எல்லாம் ஒரே மாதிரி அமைப்பைக் கொண்டவையாக இருக்கும் ஆனால் ஒவ்வொரு வாடிக்கையாளரின் இரகசிய இலக்கம் வெவ்வேறாக இருக்கும். அவரவருடைய அட்டை மூலமாக அவரவர் இரகசிய இலக்கங்களைப் பாவித்தே அந்தப் பணம் கொடுக்கும் இயந்திரங்களில் பணத்தைப் பெறமுடியும். அதேபோலத்தான் எம் எல்லோருக்கும் தாய் தந்தையர் இருக்கிறார்கள் அவர்களை எமக்குக் கொடுத்தவர் இறைவனே. அந்த இறைவனின் அருளைப் பெறவேண்டுமானால் எமது தாய் தந்தையர் மூலமாகச் சுலபமாகப் பெறமுடியும். வேறு வழிகள் எல்லாமே சுற்றுவழிதான்.

இந்த மிகச் சுருக்கமான உண்மை வழியை எமக்குப் புரிய வைக்கும் கதைதான் பிள்ளையார் மாம்பழம் பெற்ற கதை. அதாவது யார் முதலில் உலகைச் சுற்றி வருகிறாரோ அவருக்கு மாம்பழத்தைப் பரிசாகக் கொடுப்பதாக சொன்னபோது முருகன் மயிலில் ஏறி உலகை சுற்றிவர புறப்பட்டார். ஆனால் பிள்ளையாரோ தாய் தந்தையர் தான் உலகம், அவர்கள்தான் தெய்வம் என்பதை அறிந்து கொண்டதனால் அவர் தாய் தந்தையரையே சுற்றி வந்து வணங்கி மாம்பழத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார். இதன் உட்பொருள் என்னவென்றால், நாம் சமய அறிவைப் பெறுவதற்காகப் பல ஆயிரக்கணக்கான சமய நூல்களைப் படித்தாலும் பலநூற்றுக்கணக்கான சுவாமிமார்களையும், குருமார்களையும் சந்தித்துப் போதனைகள் பெற்றாலும் இறைவனுடைய உண்மையான திருவருளைப் பெறக்கூடிய சிறந்த இடம் தாய் தந்தையரின் திருப்பாதங்களேயாகும்.

திருவள்ளுவர் மிக இரத்தினச் சுருக்கமாக அதாவது 'கற்றதனால் ஆய பயன் என்கொல்வாலறிவன் நற்றாள் தொழார் எனின்' எனச் சொல்வது இறைவனுடைய நல்ல திருப்பாதங்களைத் தொழவில்லையென்றால் படித்தபடிப்பெல்லாம் வீணே என்பதாகம். ஆனால் முதல் குறளில் தனது தாய் தந்தையராகிய ஆதியையும் பகவனையுமே குறித்துக் காட்டுகின்றார். வள்ளுவர் இறைவனுக்கு எந்த உருவத்தையும் குறித்துக் காட்டவில்லை. ஆனால் இரண்டாவது குறளில் நற்றாள் தொழார் என்றும், 3வது குறளில் இலானடி என்றும் 7வது 8வது குறள்களில் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் என்றும், 9வது குறளில் இறைவன் அடி சேராதார் என்றும் நல்ல பாதங்களின் வணக்கத்தையே வலியுறுத்துகின்றார்.

எனவே கடவுளுக்கு உருவத்தைச் சொல்லாமல் பாதவணக்கத்தை வலியுறுத்தியுள்ளார். அப்படியாயின் அதன் உட்பொருள் இறைவனின் அருளைப் பெறக்கூடிய நற்றாள்களை (நல்ல பாதங்களை) எது என்று நாம் அறிய வேண்டும். இங்கே அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று ஔவையார் எமக்கு அடி எடுத்துக் கொடுக்கின்றார். இந்த ஔவைப்பாட்டி மகாஞானி. இவர் வள்ளுவரை விடக் குறைந்தவரில்லை. எனவே தாய் தந்தையரின் பாதங்களே நாம் முதலில் வணங்கக் கூடிய திருப்பாதங்கள். அன்னை தந்தையின் திருப்பாதங்களில் நெற்றியும் கைகளும் புதிய வணங்கும் போது அவர்களுள் திருக்கரங்களை எமது தலையில் வைத்து ஆசீர்வதிக்கும்போது இறையருள் மின்சாரம் பாய்வதுபோல் இருவர் உடலிலும் ஊடுருவும், அந்தவேளையில் தெய்வசாந்தி நித்தியம் வெளிப்படுகின்றது. ஆசீர்வதிப்பவரும் ஆசீர்வாதம் பெறுபவரும்

தெய்வீக உணர்வைப் பெறுகிறார்கள். இந்த வழக்கம் தொடர்ந்து நடைபெறும் போது ஆணவம் கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாகிய பாசம் நீங்கி ஆன்ம ஈடேற்றமும் அமைதியும் ஆனந்தமும் பெருகும். அன்பு நிலைக்கும்.

இப்படியான உண்மைகளைச் சுட்டிக் காட்டி உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடிக்க வைக்கும் குருவின் பாதங்களை விசுவாசத்தோடு தொழும் பாக்கியம் உள்ளவர்கள் முழுமை அடைகிறார்கள். அதாவது இறைவனின் நிறைவான அருளைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் ஆகிறார்கள். இவர்கள் பாவங்களின் அமுக்கங்களிலிருந்து விடுபட்டு உயர்வடைவார்கள். நான்காவதாகப் பெண்களுக்குக் கிடைக்கும் பெரும்பேறு அதாவது கணவனின் பாதங்களைத் தொழுவது. ஒரு பெண் முழு விசுவாசத்துடன் தனது கணவனின் பாதங்களைத் தொழுதுவருவாளாயின் அவள் இறை அருளைப் பெற்று சக்தியாகவும் சித்தியுள்ளவளாகவும் மிளிர்வாள். உண்மையில் ஆண்களைவிடப் பெண்களே பக்தி சாதனையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்கள் வீட்டிலேயே இறை அருளைப்பெற்று தெய்வீக வாழ்வுடன் ஆனந்தமாக வாழும் பாக்கியம் இருந்தும் அதை அறியாது ஆலயங்களைத் தேடி, ஆலயங்களில் ஆண்டவரைத் தேடிச் செல்கிறார்கள்.

ஒரு பெண் இல்லறத்தைச் சிறப்பாக நடாத்தி வருவாளாயின் அவள் இறைவனின் முழு அருளையும் பெறும் தகுதியைப் பெறுகிறாள். ஆனால், கணவனை உதாசீனம் செய்துவிட்டு, ஆயிரம் ஆலயங்கள் தரிசனம் செய்து விரதங்கள் பிடித்தாலும் இறைவனின் கருணை சிறிது கூடக் கிடைக்காது. பதியாகிய இறைவனின் பிரதி வடிவமே கணவன் என்பதை அறியாது, தங்கள் பதியின் (கணவனின்) பாதங்களை வணங்கி இறைவனின் பூரண அருளையும் பெறலாம் என்பதையும் அறியாமல் வாழ்கிறார்கள். கற்சிலைகளில் கடவுள் இருப்பார் என்றால் கணவனுக்குள் ஏன் இருக்கமாட்டார் என்று சிந்திக்கும் பெண்கள் நிச்சயமாக தமது கணவனை வணங்கும் தகுதியைப் பெறுவார்கள். யார் கணவனின் நல்ல குணத்தையும் தீய குணத்தையும் புறந்தள்ளிவிட்டு அவருக்குள்ளே தெய்வம் இருப்பதை உணர்ந்து, கணவனின் பாதத்தை தினமும் வணங்குகின்றார்களோ அவள் உண்மையிலே பாக்கியவதியாவாள். உண்மையில் பெண்களே மிகச் சுலபமாக இறை உணர்வையும் மெய்ஞானத்தையும் சித்தியையும் பெறமுடியும். இதைத்தான் ‘தெய்வம் தொழாள் கொழுநற் றொழு தெழுவாள் பெய் எனப் பெய்யும் மழை’ என மிகச் சுருக்கமாகச் சொன்னார் வள்ளுவர்.

கணவனை வணங்கும் பெண்ணிடம் ஆசீர்வாதம் பெறுவது ஒரு பெரும் மகானிடம் ஆசீர்வாதம் பெறுவதற்குச் சமமாகும். இப்படியான பெண்கள் சொல்வது அப்படியே நடக்கும். அடியேனைக் குருவாக ஏற்க எண்ணிய ஒரு இளம்பெண் தனது கணவனை தினமும் வணங்கும் பழக்கம் கொண்டதை அறிந்து அந்த அம்மையாரிடம் அடியேன் வீழ்ந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றபின் ஏற்பட்ட அனுபவங்கள் நன்மைகளை அடியேன் அனுபவத்தால் உணர்ந்தேன். சிலர் நினைக்கலாம் பெண்களை வணங்கலாமா? என்ற உண்மையை அறியாதவர்கள் தான் இப்படியாகத் தடுமாறுவார்கள் ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சுவாமி விவேகானந்தருடன் கல்கத்தா வீதிவழியே நடந்த சென்று கொண்டிருந்தபோது வீதியில் நின்ற ஒரு விபச்சாரியைக் கண்டு நீயும் பராசக்தியின் பிரதி வடிவம் என்பதை அறிகிறேன் அம்மா என்று அந்தப் பெண்ணை வீழ்ந்து வணங்கினார். அவர் எல்லாப் பெண்களையும் அன்னை பராசக்தியின் வடிவிலே கண்டார். தனது மனைவியைக் கூட அன்னை பராசக்தி வடிவாகவே கண்டார். தன் மனைவியை அன்னை பராசக்தியாக அலங்கரித்துச் சோடசி பூசையும் செய்து வணங்கினார்.

வணங்கும் பழக்கம் இல்லாதவர்கள் ஆரம்பத்தில் கூச்சப்படுவார்கள். உண்மை என்று அறிந்தால் அதைச் செயல்படுத்த விரும்புவார்கள். நிச்சயம் செயல்படுவார்கள். உண்மையைச் செயல்படுத்தி வாழ்பவர்களே பாக்கியசாலிகள். எண்ணம் சொல் செயல் மூன்றும் ஒன்றாய்ச் சேரும் போது அது தவம் ஆகிறது. சமய உண்மைகளைச் செயல் வடிவில் நடைமுறையில் கடைப்பிடிப்பவர்களே உண்மையான சமய வாழ்வு வாழ்பவர்கள். இவர்களே உயர்வடைவார்கள். இப்படியானவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையிலும் தெய்வீகம் சேர்ந்தே வெளிப்படும்.

தாய் தந்தையரைத் தினமும் வணங்குபவர்கள், குருவை வணங்குபவர்கள்,

கணவனைத் தினமும் வணங்குபவர்கள் இறைவனின் நேரடிப் பார்வைக்கு இலக்காகிறார்கள். குடும்பம் என்பது தெய்வீகம். அன்பும் ஒழுக்கமும் சேர்ந்த வாழ்வே இல்லற வாழ்வாகும். வணக்கமுறை குடும்பத்தில் அன்பை வளர்க்கும், பிரச்சனைகள் ஒழிக்கும், இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தெய்வீகத்தையும் ஏற்படுத்தும். இதுதான் சமய போதனையின் சாரம். ஒவ்வொரு மனிதருக்கும் குடும்பத்தை நெறிப்படுத்தப் பழக்க வேண்டும், இதுவே இன்றைய சமயபோதனையின் முதன்மையான அம்சமாகும். இதைவிடுத்து சமஸ்கிருதமா தமிழா? வேதாந்தமா சித்தாந்தமா? இந்துவா? சைவமா? மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயனளிக்காத விடயங்களைப் போதித்தும் பேசியும் மக்களைத் தெளிவில்லாத நிலைக்குத் தள்ளுவதால் என்ன பயன்? புத்தகப் படிப்பால் உண்மையான சமய உணர்வு வருமா? உள்ளுணர்வால் அந்த நுணுக்கரிய நுண்ணுணர்வை உணர்ந்து அனுபவித்துத் தெளிவு பெற்றபின், உள் உணர்வால் வெளிப்படுத்தும் போதனைதான் உண்மையான சமயபோதனை. வாய்ச்சொல்லில் வீரர்களாய் இருப்பதில் யாருக்கு என்ன லாபம்?

இந்துக்களாகிய நாம் இந்து மதத்தைப் பூரணமாக கடைப்பிடிக்கின்றோமா?

- யாழ் சண்முகத்தார் மைந்தன் -

ஈழத்தமிழர்களாகிய நாம் எமது மதம் சைவம் என்கிறோம். ஏனென்றால் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுவதால், நமது முன்னோர்கள் சைவ சித்தாந்தத்தைக் கடைப்பிடித்தார்கள். சித்தாந்தம் என்பது அறிவின் எல்லை அல்லது முடிவு. சித் என்பது அறிவு. அறிவின் எல்லையாய் நிற்பது பரம்பொருள். ஆனால் பரம்பொருள் எல்லையற்றது. அந்த எல்லையற்ற பரம்பொருளை உணர்த்துகின்றது சிதம்பர இரகசியம். அதாவது பரம்பொருள் பரவெளியாய் பரப்பிரம்மமாய் உறைகின்றது. இதுவே சிவமயம்.

வேதங்களின் எல்லையாகிய ஞான விளக்கம், அதாவது எல்லா மதங்களும் ஒரு இலக்கை நோக்காகக் கொண்டவை, எல்லா மதங்களும் வேதங்களின் சாரமே என்றும், பொய்யான தோற்றங்களிலும் மெய்யான இறைவனே உறைகிறான் எனும் உண்மை அறிவே வேதாந்தம். அதாவது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது. ஏனைய மதங்களைப் பற்றிய அறிவை வளர்க்கும் போதுதான் எமது மதத்தைப் பற்றிய பூரண அறிவு ஏற்படும்.

இன்றைய கால கட்டத்தில் உலகம் பூராகவும் பல மதங்கள் தோன்றி பல நாடுகளிலும் பரவியுள்ளது. இந்த மதங்களின் வேறுபாட்டிலிருந்து பொதுக்கருத்துக்கு அல்லது வேற்றுமையிலிருந்து ஒற்றுமையைக் காண விழைவதே வேதாந்த அறிவு. சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராம கிருஷ்ண மிஷனை ஆரம்பித்து அதன் கிளை நிறுவனங்களாக மேற்கு நாடுகளில் செயற்படும் மடங்களுக்கு வேதாந்த சொசைற்றி என்று பெயரிட்டார். அவை இன்றும் வேதாந்த சொசைற்றி (Vethantha Society) என்ற பெயரோடுதான் இன்றும் இயங்குகின்றன. வேதாந்த அறிவு இன்றைய காலத்திலும் புலம்பெயர்ந்து வாழுகின்ற இந்து மக்களுக்கு மிகவும் தேவையான ஒன்று.

அதாவது நாம் மற்றைய மதங்களுக்கும், மற்றைய மதங்களைப் பின்பற்றுகின்ற மக்களுக்கும் மதிப்பளிக்கவேண்டும். அதே நேரத்தில் நாம் எமது மதத்தின் உண்மைகளை அறிந்து கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் இந்து மதத்தைச் சார்ந்த ஒருவர் மதம் மாறும்போது அவர் தன் தாயின் உறவை முற்றாகத் துண்டித்து பிறர் வீட்டில் தஞ்சம் புகுந்து வாழ்பவருக்கு ஒப்பாகும். ஆனால் பிற மதத்திலிருந்து இந்து மதத்துக்கு வருபவர்கள் தனது பரம்பரைக்கு உரித்தான வைரமாளிகையில் குடியிருக்க வருவதற்கு ஒப்பாகும். காரணம் இந்து மதந்தான் எல்லா மதங்களின் சாரத்தையும் உள்ளடக்கியுள்ளது. இந்து மதத்திலேதான் யோக சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், மந்திர தந்திர சாஸ்திரம், காம சாஸ்திரம், மூலிகைகளின் சிறப்பினைக் கூறும் ஆயுள் வேத சாஸ்திரம் போன்ற அரிய சாஸ்திரங்கள் உள்ளன. மானிட இனத்துக்கு

பெரும் நன்மைகளைத் தந்ததும் தரக்கூடியதுமான இத்தகைய சாஸ்திரங்களைக் கொண்டு முழுமையாக இருக்கும் மதம். மதங்களுக்கெல்லாம் முதன்மையானதான இந்துமதமே தாய் மதமாக விளங்குகின்றது.

விஞ்ஞான ஆராய்ச்சியின் முன்னேற்றம் வளர வளர இந்து மதத்தின் உண்மைகள் நிரூபிக்கப்படும். மக்களிடையே ஆன்மீக வளர்ச்சி ஏற்படும் போது உலகில் இந்து மதம் சிறப்போடு விளங்கும். உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான மதம் இந்துமதமே. பிற மதத்தவர்கள் இந்து மதத்திற்குள் நுழைவதற்குச் சிறப்பான நுழைவாயில் வேதாந்தமே. வேதாந்த தத்துவங்களின் மூலம் சுவாமி விவேகானந்தர் மேற்கு நாடுகளில் விதைத்த விதைதான் இன்று பல லட்சக் கணக்கான பிறமதத்தவர்களை இந்துக்களாக மாற்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

மேற்கு நாடுகளில் வாழுகின்ற பிள்ளைகள் எதையும் விளக்கத்தோடு அறிவதைத்தான் விரும்புகிறார்கள். சமய அறிவையும் விளக்கத்தோடு பெறுவதைத்தான் விரும்புகிறார்கள். நாம் வினாவிடை முறையில் படித்ததனால் பாடமாக்கியதை அப்படியே சொல்லும் நிலையில் தான் உள்ளோம்.

சொல்லுகின்ற தேவாரத்தின் கருத்தை அறிய விரும்புகிறார்கள் இளம் தலைமுறையினர். நாம் அதைக் கொடுக்க மறுப்பதால் சமயத்தின் அறிவைத் தேடும் நோக்கத்திலிருந்து திசை திரும்புகிறார்கள். மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டிய பெரும் பங்கை சமயங்கள்தான் ஆற்றவேண்டும். வாழ்க்கையைச் சீரோடும் சிறப்போடும் பண்பாட்டோடும் அமைப்பதற்கும் அங்கே ஆன்மீகம் பின்னப்பட்டிருக்கவேண்டும். ஆன்மீகம் இழையோடி நிற்கும் போதுதான் வாழ்க்கை செழிப்படையும்.

இங்கே பலர் பண்பாடு பண்பாடு என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பண்பாடு என்றால் அவர்களுக்கே விளங்கவில்லை. தமிழர் பண்பாடு என்றால் வேட்டி கட்டுவதும் சேலை உடுப்பதும், தமிழ் பேசுவதும், திருக்குறளைப் பாடமாககுவதுமா பண்பாடு? பண்பாடு என்றால் ஆங்கிலத்தில் Civilization என்றும் வடசொல்லில் நாகரீகம் என்றும் பொருள்படுகின்றது. நாகரீகம் என்பது தமிழ் சொல் அல்ல. பண்படுத்தப்பட்ட வாழ்க்கைதான் உயர்வானது. பண்பாடு என்பது மக்களின் மனங்கள் பண்படுத்தப்பட்டிருக்கவேண்டும். நாம் ஏதோ மக்களுக்குச் சேவை செய்கிறோம். அவர்களைப் பண்பாட்டோடு வாழச் சொல்லுகிறோம், நீங்கள் பண்பாட்டோடு வாழுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் எமக்கே பண்பாடு என்றால் விளங்கவில்லை மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தால் சொல்லுகின்ற நாம் தான் முட்டாள்கள், மக்கள் அல்ல.

இந்து நாகரீகம் என்று பாடத்திட்டத்தில் உயர்வகுப்பில் இந்து சமய தத்துவங்கள் போதிக்கப்பட்டது. இந்து நாகரீகமென்றால் உயர்வகுப்பில் போதிக்கப்படும் சமய பாடமா? நாம் ஏட்டுக் கல்வியோடு சமயத்தைப் பூட்டிவைத்ததால் பண்பாட்டைச் சீரழிய விட்டுவிட்டோம். மதம் என்றால் தத்துவம் படிப்பதற்காகவா? அல்லது புத்தகங்களாக்கி அலுமாரிகளிலும், நூல்நிலையங்களிலும் வைத்து அழகுபார்ப்பதற்கும், பரீட்சை எழுதிப் பட்டம் வாங்குவதற்கு மட்டுமா சமயம். சமயம் என்பது அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான செயல்பாடு, சமயம் என்பது மக்களின் வாழ்வைப் பண்படுத்தி வாழவைக்கும் சாதனம். ஆன்மீகம் சேரவில்லையென்றால் அங்கே பண்பாட்டுக்கு அதாவது தமிழர் பண்பாட்டுக்கு அர்த்தமே இல்லை.

விளங்காத பொருளை வைத்து மக்கள் மத்தியிலே நாம் விளையாட நினைக்கிறோம். நாமும் முட்டாள்களாக்கி மக்களையும் கீழ் நிலைக்கு தள்ளிவிடுகின்றோம் என்பதை நாம் உணருவதில்லை. பல முட்டாள்கள் மத்தியிலே ஒரு நல்ல காரியத்தைச் செயல்பட வைப்பது மிக மிகக் கடினமான காரியம். நல்ல காரியங்களைச் செயல்படுத்த முனைபவர்களை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களை மட்டப்படுத்தி அவர்களின் பணிகளுக்கு தடைசெய்யும் குள்ளநரிக் கூட்டங்கள் அதிகரித்துள்ளன. இதைத்தான் ஒரு சினிமாப்பாடலில் 'குள்ளநரிக்கூட்டம் வந்து குறுக்கிடும், அது நல்லவர்க்குத் தொல்லை தந்து மயக்கிடும்' என்று பாடப்பட்டது. இந்த குள்ள நரிக்கூட்டங்களால் பல நல்லவர்கள் ஒதுங்கிக் கொள்கிறார்கள். ஆனால் துணிச்சலோடு இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் செயற்படுபவர்களே சமூகத்துக்கும் உலகுக்கும்

41ம் பக்கம் பார்க்க

பிள்ளை வளர்ப்பும் தொல்லை தவிர்ப்பும்

- அடியார் விபுலானந்தா -

கனடா நாட்டில் பிள்ளைகளை வளர்ப்பது கஷ்டம் என்கிறார்கள் பல தமிழ்ப் பெற்றோர்கள். ஏன் என்று பார்த்தால் பிள்ளைகளை அடித்து வளர்க்கமுடியாது என்று சொல்லுவார்கள். அடித்து வளர்ப்பதற்காகவா பிள்ளைகளைப் பெறவேண்டும்? பிள்ளைகளை அடித்து வளர்க்க விரும்பும் பெற்றோர்கள் பிள்ளைகள் மேல் அக்கறை கொண்டவர்களா? பிள்ளைகள் மேல் அக்கறை கொள்பவர்கள் எப்படியான விதத்தில் பிள்ளைகளை வளர்க்கவேண்டும் என்பதை அறிந்து வளர்க்கவேண்டும்.

பிள்ளை வளர்ப்பும் இல்லற விதியில் சேர்கின்றது. கணவனும் மனைவியும் தங்களுடைய காமசுகத்துக்காகக் கொள்ளும் உடல் உறவினால் கருக்கட்டல் ஏற்படுகின்றது. கருவைச் சுமந்து உருவாக்கும் ஆற்றலைத் தாய் பொறுப்பேற்கின்றாள். தாயாயனவள் வயிற்றிலே பிள்ளையைச் சுமந்துதான் ஆகவேண்டும். பிள்ளை கருவாகியதும் பிள்ளையைச் சுமக்க விரும்பாத தாய்மார் கருவைச் சிதைக்கிறார்கள். இது ஒரு வகையில் கொலைக்கு ஒப்பாகும். இக்காலத்தில் கடவுள் தந்த கொடையை மறுத்து தாம் செய்வது கொலையென்று அறியாமல் இந்தக் கொலைகள் நடைபெறுகின்றன. ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்கின்ற நிலையைப் பெறுவது திருமணத்தின் பின்தான். திருமணம் ஆகப் போகின்ற ஆணும் பெண்ணும் அறியவேண்டிய பல விடயங்கள் உண்டு.

புதிதாகத் திருமணம் செய்யும் தம்பதிகள் இல்லற விதிகளை அறிந்திருக்க வேண்டும். அதாவது குடும்பம் நடாத்தும் தகுதி இருக்கவேண்டும். இன்று நடைபெறும் திருமண உறவுகள் தகுதி இல்லாமலே ஏற்படுத்தப்படுகின்றன. இன்று பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களின் குடும்ப உறவுகள் நாகரீகம் இழந்த நிலையில் காணப்படுகின்றன. கவர்ச்சியான உடை உடுத்துவதும் வசதிகளைப் பெருக்குவதும்தான் நாகரீகம் என்று இன்று பலர் நினைக்கின்றார்கள். இப்படியான வாழ்வு பிறருக்காக வெளி உலகிற்காக செய்யப்படுவது. இது புறவாழ்வின் நாகரீகமாகும். இது எப்படியென்றால் குளிக்காமல் உடல் நாற்றமடிக்கும் ஒருவர் நறுமண வாசனைகளால் தனது நாற்றத்தை மறைத்து அழகான உடை உடுத்தி நடமாடுவதற்கு ஒப்பாகும்.

வீட்டுக்குள் குடும்பம் சீராக இயங்காமல் வசதிகளைப் பெருக்கி வாழ்வதால் என்ன லாபம்? இது தாங்கள் வசதியாக வாழ்வதாக மற்றவர்கள் அறிய வேண்டும் எனும் நடிப்பு வாழ்க்கைதான். இப்படியான வாழ்வில் சந்தோசம் ஏற்படுமா? இப்படியான வாழ்வு நாகரீகமா? உண்மையான நாகரீகம் என்பது பண்படுத்தப்பட்ட வாழ்வுதான். தமிழ் மொழியில் நாகரீகம்(இது வடமொழிச் சொல்) எனும் சொல்லுக்கு பண்பாடு என்று சொல்லப்படும். பண்பாட்டுடன் வாழும் வாழ்க்கையே உண்மையான நாகரீகமாகும். பண்பாடு எமக்கு துன்பமற்ற அமைதியான மகிழ்ச்சியான வாழ்வைத் தருகின்றது. அகவாழ்விலும் புறவாழ்விலும் பண்பாட்டுடன் நடப்பவர்களே நாகரீகமாக வாழ்பவர்கள். இப்படியானவர்களின் மனது பக்குபவப்படுத்தப்பட்ட நிலையிலும் அடக்கமான நிலையிலும் இருக்கும் இதனால் இவர்கள் அற்ப ஆசைகளுக்கு இடம் தரமாட்டார்கள். ஆசைகளே துன்பங்களுக்கே காரணம். ஆகவே துன்பங்களுக்குக் காரணமான ஆசைகளை அடக்கிவாழப் பழகியவர்களுக்குத் துன்பம் ஏது?

இந்த மன அடக்கத்தைச் சிறு வயதிலே பழகியவர்கள் அதாவது தாய்தந்தையரிடமிருந்து பழகியவர்கள் குடும்பத்தை அமைக்கும் போது குடும்ப வாழ்வுக்குத் தயாராகிறார்கள். இப்படியான தகுதி உள்ளவர்கள் பிள்ளைகளைப் பொறுப்புடனும் அன்புடனும் வளர்க்கும் தகுதியுள்ளவர்களாவர். ஆசையுள்ள பெற்றோர் போதும் எனும் மனம் இல்லாத காரணத்தாலும் இப்படி வாழ்ந்தால் எதிர்காலத்தில் என்ன நேரும் என்னும் அறிவு இல்லாத காரணத்தாலும் தமது குறைபாட்டால் நேரும் மன உளைச்சலைப் பிள்ளைகள் மேல் காட்டுவார்கள்.

பிள்ளைகளை அடிப்பதும் மிரட்டி வளர்ப்பதும் தங்களுடைய உரிமை என்று நினைத்தே இந்தப் பாவமான காரியத்தைச் செய்கின்றார்கள்.

பிள்ளைகளை அடிக்கப் பெற்றோருக்கு

உரிமையை யார் கொடுத்தது? அதுமட்டுமல்ல பிள்ளைகளை மிரட்டித் துன்பம் கொடுப்பது பாவமான செயலாகும் என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும். சிந்திக்கும் ஆற்றல் உள்ள பெற்றோரும் இதைக் கவனமாகப் பாருங்கள். அதாவது பிள்ளைகளை அடிக்கும்போதும் அவர்களை மிரட்டி அடக்கும்போதும் அவர்களுடைய மனநிலை பாதிப்படைகிறது. சிறுவயதிலே அவர்கள் அடக்கப்படும் போது அவர்களுடைய ஆற்றலும் உயர்ந்த செயல்பாடுகளும் தளர்ச்சியடைகிறது. அத்தோடு அவர்களின் மனம் வேறு கோணத்துக்குத் திசைதிரும்புகிறது. சில பெற்றோர் தமது மனஉளைச்சலைப் பிள்ளைகளிடம் தீர்க்கின்றார்கள். தொடர்ந்து அடித்தும் மிரட்டியும் வளர்ப்பதால் அவர்கள் சட்டத்தின் உதவியால் பெற்றோர்களை மதிக்காத அளவுக்குச் செல்கிறார்கள்.

பிள்ளைகள் தவறான வழிக்குத் திசை திரும்புவதற்குக் காரணம் பெற்றோரின் வளர்ப்புத்தான். பிள்ளைகளை வளர்க்கத் தெரியாத பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அடித்து அடக்க முற்படுவதால் பிள்ளைகளின் மனம் எதிரான உணர்வுகளையும் எதிரான எண்ணங்களையும் உருவாக்குகின்றது. இதைப்பெற்றோர்கள் உணர்வதில்லை. பிள்ளைகள் குழப்படி என்று கூறுவது தவறு பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே அன்பான அரவணைப்போடு வளர்க்க வேண்டும். அவர்களோடு அதிக நேரத்தை ஒதுக்கவேண்டும். குறிப்பாகப் பெண்கள் பிள்ளைகளுடன் அதிக நேரத்தை ஒதுக்கி அவர்களோடு நல்ல கருத்துள்ள பாடல்கள் கதைகளைச் சொல்லி வளர்த்து வரவேண்டும். நல்ல எண்ணங்களை பிஞ்சு உள்ளங்களில் விதைத்து வளர்க்கவேண்டிய பொறுப்பு தாயிடம் உள்ளது. அந்தக் காலத்தில் பிள்ளைகளுக்கு நித்திரை கொள்ளும்போது தாலாட்டுப் பாடுவார்கள். தாலாட்டுப் பாடல்களில் நல்ல கருத்துக்களை ஊட்டி விடுவார்கள்.

ஆனால் இன்று பிள்ளைகளுக்கு மியூசிக் போட்டுத் தூங்க வைப்பார்கள். இதனால் பிள்ளைகள் தற்கால ஆங்கிலப் பாடல்களில் மோகம் கொண்டு அர்த்தமற்ற வாழ்வுக்குள் தள்ளப்படும் சூழ்நிலை உருவாகிறது. பெற்றோர் அளவுக்கு அதிகமாகப் பணம் சம்பாதிக்க நினைப்பதாலும் ஆசைகளுக்கு அடிமையாவதாலும் பிள்ளைகளுக்காக ஒதுக்கி வாழவேண்டிய நேரத்தைப் பணம் சம்பாதிப்பதிலேயே கழிக்கின்றார்கள். இதனால் பிள்ளைகள் பெற்றோரின் அரவணைப்பிலிருந்து விடுபடுகிறார்கள். ஆனால் பெற்றோர்களைக் கேட்டால் நாங்கள் பிள்ளைகளுக்காகத் தான் வாழ்கிறோம் என்பார்கள். முதலில் பெற்றோர் கற்கவேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. தாயும் தந்தையும் வாழும் முறையிலிருந்துதான் பிள்ளைகளின் குணநலன்கள் வெளிப்படுகின்றன. தாய் தந்தை அன்பு குறைந்த நிலையில் பிறருக்காகத் தாம் ஒற்றுமையாக வாழுவதாக நடிப்பதை பிள்ளைகள் உன்னிப்பாக கவனிக்கிறார்கள். இங்கு பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் குறிப்பாக சிறுவர்கள் திறந்த மனதோடு பழகுவதையும், உண்மைபேசி வாழ்வதையும் விரும்புகிறார்கள். ஆனால் நம் பெற்றோர்கள் சமூகநலப் பணம் பெறுவதிலிருந்து பலவிதமான கொடுக்கல் வாங்கல் சேமிப்புக்கள் பிறரோடு பழகுதல் போன்ற நடவடிக்கைகளில் பொய்யும் புரட்டும் கலந்து வாழப் பழக்கப்பட்டதனால் பிள்ளைகள் பாடசாலைகளில் கற்கும் பழக்கத்திலிருந்து தமது தாய் தந்தையர் பொய்யும் புரட்டும் கலந்து வாழும் வாழ்வை உணர்ந்து தமது மனநிலையைப் பாதிப்புக்குள்ளாக்குகின்றார்கள். இந்த இக்கட்டான சூழ்நிலையால் பிள்ளைகள் பெற்றோருடன் ஒத்துழைக்க மறுக்கின்றார்கள்.

பெற்றோர் வீட்டில் உண்மையுள்ளவர்களாக வாழப் பழக வேண்டும். ஒத்துழைத்து வாழப் பழகவேண்டும். கருத்து வேற்றுமையால் ஏற்படும் சண்டை சச்சரவுகளை நீக்கி வாழப் பழக வேண்டும். கணவன் மனைவியாகிய நீங்கள் ஒற்றுமை இல்லாமல் வாழ்ந்தால் பிள்ளைகளின் மனம் நிலைதடுமாறும். பிள்ளைகள் மனம் நிலைதடுமாறும் போது உங்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள். இதனால் அவர்களுக்கு அடித்து அடக்கி வளர்க்கும் உணர்வுகள் உங்களுக்கு ஏற்படும். நீங்கள் பிள்ளைகளுக்கு அடிக்கும் போது பிழை உங்களுடையது என்பதை முதலில் சிந்தியுங்கள். முதலில் நீங்கள் ஒற்றுமையோடும் அன்போடும் வாழப் பழகவேண்டும். பிறருக்காக நடிப்பதும், பிறர் உங்களை மதிக்கவேண்டும் என்பதற்காக வீணான பணச்செலவுகள் செய்வதும் பிள்ளைகளுக்கு நன்மைகள் ஏற்படுமா? உங்களுக்கு ஆடம்பர வாழ்வினால் பிள்ளைகள் நல்ல பழக்கங்களையும் பண்பையும் பழகுவார்களா? பிள்ளைகளைப் பண்போடு சிறுவயதிலே வளர்த்துவிடாமல்

சீதனத்தைச் சேர்த்துக் கொடுப்பதற்காக மாடாக உழைத்து என்ன பயன்?

'அர்த்தம் உள்ள வாழ்வு' வாழத் தெரிந்தவர்களின் பிள்ளைகளுக்கு நல்வாழ்வு சுலபமாகக் கிடைக்கின்றது. வாழத்தெரியாதவர்கள் பிள்ளைகளை அடித்தும் மிரட்டியும் வளர்ப்பதால் பிள்ளைகளின் ஆற்றல் மழுங்கடிக்கப்படுகின்றது. பல படித்தவர்கள் கூட தாம் அடிவேண்டித் தான் படித்ததாகவும் அதனால் பிள்ளைகளை அடித்துத்தான் வளர்க்க வேண்டும் என்பார்கள். இப்படிச் சொல்லும் படித்தவர்கள் 'சப்பித் துப்பிப்' பரீட்சை எழுதியவர்கள் தான். ஆனால் இவர்களிடம் சுயசிந்தனைக்குரிய ஆற்றல் இருக்காது. இவர்கள் தங்கள் பிள்ளைகளை அடித்துத் தங்களைப் போல் முட்டாள்களாகவும், சுயசிந்தனை அற்ற பட்டதாரிகளுமாக ஆக்க நினைப்பார்கள். பிள்ளைகளை அன்போடு ஆற்றல் உள்ளவர்களாகவும் பண்புள்ளவர்களாகவும் வளர்த்தெடுப்பது தான் நல்ல பெற்றோரின் கெட்டித்தனம். பிள்ளைகளை அன்போடும் பண்போடும் வளர்ப்போமாக!

38ம் பக்கத்தொடர்ச்சி

பெருநன்மை தரும் அரும் செயல்கள் ஆற்றியுள்ளார்கள்.

துணிச்சலோடு எதிர்த்துப் போராடுபவர்களே பயனுள்ள காரியங்களைச் சமூகத்துக்குத் தந்துகொண்டிருக்கின்றார்கள். உண்மையான ஆன்மீகவாதிகள் அருகிக் காணப்படுவதால் நம்மத்தியிலே இந்து மதசெயல்பாடுகள் சாரமிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன. ஆங்காங்கே சிறு சிறு நட்சத்திரங்களாக மின்னுகின்ற சில பெரியோர்கள் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நம் மத்தியிலே ஆன்மீகசாதகர்கள் தோன்றவேண்டும். சமயநெறியாகிய ஆன்மீக உண்மைகளை மக்கள் விளங்கிக் கொண்டால்தான் அதைக் கடைப்பிடிப்பார்கள். மக்கள் அதைக் கடைப்பிடிக்கும் போதுதான் பண்பாடு வெளிப்படும். மனத்தூய்மையும், மனப்பக்குவமும் ஆன்மீகத்தின் அச்சாணியாகும். முதலில் நாம் ஒவ்வொருவரும் எமது மனத்தைப் பண்படுத்தி நல்ல இந்துவாக வாழ்வோமாக.

44ம் பக்கத்தொடர்ச்சி

நாளை வைப்பாயாக" என்று கூறி மறைந்தருளினார். மறுநாள் காலை அரசன் திருநின்றவூர் சென்று பூசலாரின் கோயிலைப் பற்றி விசாரித்தார். பூசலார் என்பவர் அங்கு வசிப்பதையும் ஆனால் அவரால் கோவில் கட்டப்படவில்லை என்பதையும் அங்குள்ள அந்தணர்கள் மூலம் அறிந்தார். அப்போது அரசன் பூசலாரிடம் சென்று தான் கனவில் கண்ட காட்சியினைக் கூறினான். பூசலார் இறைவனின் திருவருட் திறனை நினைந்து மெய்சிலிர்த்து நின்றார். பின்பு தன் மனதில் கட்டிய மனக்கோயிலைப் பற்றிக்கூற அரசன் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி விடைபெற்றான். பூசலார் தன் மனக்கோயில் இறைவனை இருத்தி வழிபட்டுப் பேரின்ப நிலையடைந்தார். இவரின் நெஞ்சமதில் இறைவனின் நினைவு நீக்கமற நிறைந்திருந்ததாலேயே, அவரின் எண்ணமெலாம் திருக்கோயில் அமைப்பதிலேயே நிலைத்து நின்றதாலும் நற்பேறு எய்தினார். எனவே நாமும் நல்லதை நினைப்போம் நன்னிலை பெறுவோம்.

இறைவனால் படைக்கப்பட்ட படைப்புகளில் மனிதப் பிறவியே மகத்தானது. அதிலும் மனித மனமே அதி சிறந்தது. மனத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் அவன் மனிதன் எனப் பெயர் பெற்றான். மனம் தூய்மையாக இருந்தால் மனதிலிருந்து எழும் எண்ண அலைகளும் தூய்மை அடையும். ஒவ்வொருவருக்குள்ளும் இறைவன் இருப்பதை உணர்ந்து ஒருவரையொருவர் உண்மையாக வணங்குதல், பணிதல், விட்டுக்கொடுத்தல், மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்தல் முதலிய நற்பண்புகள் அரும்பி அவற்றின்மூலம் அமைதியும் வெற்றியும் சாந்தியும் அடைவோமாக.

'ஒத்த தறிவான் உயிர் வாழ்வான்
மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்'

-திருக்குறள்

எனவே எம் மனம் எனும் ஆற்றில் நல்ல நினைவெனும் ஊற்றைப் பெருக்கு வோமாக.

வேதாந்த ஞான மன்றம் ஏப்ரல் 2000த்தில் நடாத்திய பரீட்சையில் பரிசில் பெறும் மாணவர்கள்

பேச்சுப்போட்டி

பாலர்பிரிவு

முதலாம் இடம் - வருணி ஸ்ரீபதி பாலமுரளிதரன்
இரண்டாம் இடம் - சிந்துஜா ஜெகதீஸ்வரன்,
- தர்சிகா இளந்திரையன்
மூன்றாம் இடம் - தனிகன் சதானந்தம்

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - வினுஷா ராஜ்குமார்,
- சகானா பத்மநாதன்
இரண்டாம் இடம் - சகானா வீரசிங்கம்
மூன்றாம் இடம் - ஜெகதீஸ்வரன் யோகநாயகம்,
- நிவேதா வீரசிங்கம்,
- ஜதீபா சதானந்தம்

மத்திய பிரிவு

முதலாம் இடம் - ஆரணி முருகானந்தன்
இரண்டாம் இடம் - சுவிஸ்சானா தியாகராஜா
மூன்றாம் இடம் - கீத்தனா சோமஸ்கந்தராஜா,
- வவீனா சோமஸ்கந்தராஜா

மேற்பிரிவு

முதலாம் இடம் - தர்ஷன் ஸ்ரீகிருஷ்ணராஜா
இரண்டாம் இடம் - பிரபாகரன் திருநாவுக்கரசு
மூன்றாம் இடம் - கபிலன் சிவசுப்பிரமணியம்,
- சுபாங்கி அசோக்குமார்

சைவத்தமிழ் அறிவுப்போட்டி

பாலர் பிரிவு

முதலாம் இடம் - கௌசிகா திலகசுந்தரம்
இரண்டாம் இடம் - ரிஷிகேஸ் நிவாகரன்,
- தனிகன் சதானந்தம்
மூன்றாம் இடம் - ஜஸ்மிலா ராஜமாணிக்கம்,
- ஜெசிதன் ஜெயதேவன்,
- அபிராமி சண்முகரட்ணம்

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - சிந்துஜன் ஜெகதீஸ்வரன்
இரண்டாம் இடம் - மகிந்தன் மாணிக்கவாசகர்,
- சகானா பத்மநாதன்
மூன்றாம் இடம் - ஜெகதீஸ்வரன் யோகநாயகம்,
- மரினா இரட்னசிங்கம்,
- ஜெனனி இராசநாதன்

மத்திய பிரிவு

முதலாம் இடம் - உதயயோதி சண்முகம்,
- சுவிஸ்சானா தியாகராஜா,
- ஜிசன் ஜெயகாந்தகுமார்
- கீர்த்திக்கா துரைராஜா
இரண்டாம் இடம் - விக்கினேஸ்வரன் யோகநாயகம்,
- கீர்த்தனா சோமஸ்கந்தராஜா,
- கபிலன் பரந்தாமன்,
- கோகுலராஜன் பாலச்சந்திரா,
- பானுஜா உருத்திரசிங்கம்,
- நிதிர்சன் பாலச்சந்திரா,
- நர்த்தனா சிவபாலன்

மேற்பிரிவு

முதலாம் இடம் - தர்ஷன் ஸ்ரீகிருஷ்ணராஜா,
- சாதுளன் பரந்தாமன்
இரண்டாம் இடம் - ஸ்ரீநிகாந் பனனீர்ச்செல்வம்
மூன்றாம் இடம் - பிரபாகரன் திருநாவுக்கரசு

தேவாரப்போட்டி

பாலர் பிரிவு

முதலாம் இடம் - அனுசியா யோகேஸ்வரன்
இரண்டாம் இடம் - பிரணவன் ஸ்ரீரஞ்சன்
மூன்றாம் இடம் - ரிஷிகேஷ் நிவாகரன்,
- சிந்துஜா ஜெகதீஸ்வரன்

கீழ்ப்பிரிவு

முதலாம் இடம் - வினுஷா ராஜ்குமார்
இரண்டாம் இடம் - அனோஜினி குமரதாஸன்
மூன்றாம் இடம் - நிவேதா வீரசிங்கம்,
- ரூபிகா இரட்னசிங்கம்,
- காருண்யா நித்தியானந்தம்

மத்தியபிரிவு

முதலாம் பிரிவு - வவீனா சோமஸ்கந்தராஜா,
- சாளினி செல்வரட்ணம்
இரண்டாம் பிரிவு - சுஜிதா பன்னீர்ச்செல்வம்
மூன்றாம் இடம் - ஆரணி முருகானந்தன்,
- சாமினி செல்வரட்ணம்

மேற்பிரிவு

முதலாம் இடம் - சுபாங்கி அசோக்குமாரன்
இரண்டாம் இடம் - சோபனா ரவீந்திரன்
மூன்றாம் இடம் - ஆரபி குலேந்திரன்

நினைவு நல்லது வேண்டும்

- திருமதி வனஜா செல்வேஸ்வரன் -

உயிர்கள் அனந்தம். அவை தாம் முன்பு செய்த நல்வினை தீவினைப் பயனாகப் பிறவிகளை எடுக்கின்றன. ஓரறிவுள்ள புல் முதல் ஆறறிவுள்ள மக்கள்வரை பிறந்து இறந்து பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. பிறவியின் நோக்கம் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனது திருவடிகளை வணங்கித் துதித்து அவனடிகளை அடைந்து பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரைசேர்வதாகும்.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்'' என்பது

திருவள்ளுவரின் பொய்யாமொழி. இப்படிக் கரை சேர்வதற்கு மனிதப்பிறவியே மிகவும் உகந்தது. ஒளவைப் பிராட்டியாரும் ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்று கூறிப் போந்துள்ளார். செய்யத்தக்கது, தகாதது, நல்லது கெட்டது, பாவம் புண்ணியம் என்பவற்றைச் சரியாகப் பகுத்தறியக் கூடிய சக்தி மனிதப் பிறவிக்கு மட்டுமே உள்ளது. எனவே எம் நெஞ்சில் தோன்றுகின்ற அசுரர்களாகிய தீய நினைவுகளையும் சுரர்களாகிய நல்ல நினைவுகளையும் சீர்தூக்கி ஆராய்ந்து அசுரர்களை அடியோடு விரட்டியடித்துவிட்டு சுரர்களை வரவேற்று நாமஜெபம் நற்றொண்டு முதலியனவற்றைச் செய்து மன உறுதியுடன் மேலோங்கி நிற்றலே மேல் நிலை பெற வழியதாகும்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்கிறார் வள்ளுவர் மானிடராகப் பிறந்த நாம் மனம்போன போக்கெல்லாம் மனதை அலையவிட்டு தவப்பொழுதை அவப்பொழுதாக்கி தேவையற்ற எண்ணங்களை எண்ணி அரிய காலத்தை வீணடித்து வருகிறோம். எண்ணங்கள் ஓய்வதில்லை. அவை நல்ல நினைவுகளாயின் பாதகமில்லை. ஆனால் நாம் சாகும் வரை சஞ்சலத்துடன் வாழ்வதையே தலைமேற் கொள்கிறோமே. ஒளவையார் இதனை மிகவும் சுவைபட

''உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந்தெண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்''

என்று பாடியுள்ளார்.

இதே கருத்தினைப் பொய்யாமொழிப் புலவராகிய வள்ளுவனாரும்

''ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல''

என எமக்கு அறியத் தந்துள்ளார். தீய எண்ணங்களைக் களைந்து நல்ல எண்ணங்களை நினைந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் நம்மை அர்பணிந்து வாழப் பழகவேண்டும். இப்படி வாழ்பவர்களே மானிடப் பிறவியெடுத்த உத்தம சீலர்கள். இவர்களின் பூத உடல் அழிந்தாலும் புகழுடல் அழிவதில்லை. நித்திய வாழ்வு செற்றோரையும் நினைவு கூருகின்றோம். இவர்களே மானிடப் பிறவியில்

மகத்தானவர்கள் இந்த வரிசையில் நாயன்மார்கள், ஆழ்வார்கள். மகாத்மாகாந்தி அரிச்சந்திரன் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களே வள்ளுவம் கூறும்.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்''

என்ற குறளுக்கு இலக்கியமாக அமைந்தோராவார்.

இக்காலத்திலும் எத்தனையோ உத்தமர்கள் பெரியார்கள் வழிநடந்து எமக்கு நல்வழி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் அதை உணர்வதில்லை அப்படி உணரும் ஆற்றல் உள்ளவர்களும் அவற்றில் அக்கறைகொள்வதில்லை. இது தவறான பாதையாகும். நாமும் நல்லவழி செல்லமுயல வேண்டும். நல்ல பெரியார்களின் வாழ்க்கை முறைகளையும் நூல்களையும் கண்டும், கற்றும், கேட்டும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அறிஞர்களைப் பின்பற்றியும் வாழ முனைந்தால் உயர்ந்த நல்லெண்ணமுள்ள உயர்ந்த நிலையை அடையமுடியும் என்பது உறுதி.

'' நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

இது ஔவையாரின் மூதுரை

''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்.
உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
மதமானபேய் பிடியாதிருக்கவேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதிவேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்.
தருமமிகு சென்னையிற் கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே''

இவ்வாறு இராமலிங்க சுவாமிகள் இறைவனிடம் இறைஞ்சி வேண்டுகின்றார்.

இதிகாசங்கள் புராணங்கள் என்பவற்றில் வரும் பாத்திரங்களை நாம் உற்று நோக்குவோமானால் அவரவரது எண்ணக் கருவூலங்களையும் அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட வாழ்வு தாழ்வுகளையும் நன்கு அறியலாம். உதாரணமாக இராமாயணத்தில் தந்தை தாய் வாக்கிய பரிபாலனஞ் செய்த இராமனது அதிஉயர்ந்த மன எண்ணங்களைக் காண்கிறோம். இராமனைப் பழிவாங்கும் நோக்கங்கொண்ட மந்தரை தனது தீய எண்ணங்களால், கைகேசியின் மனதில் மண்ணாசை கூட்டித் தனது சொல் வன்மையால் தீய எண்ணங்களை விதைத்தமையே இராமாயணத்திலுள்ள எல்லாத் துன்பங்களுக்கு அழிவுக்கும் காரணமாகும். இதே போல மகாபாரத்தை எடுத்துக் கொண்டால் தமையன் அருள் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர் தருமருக்கு இளையவர்களாகிய நால்வரையும் காண்கிறோம். பஞ்சபாண்டவர்கள் மீது துரியோதனன் கொண்ட பொறாமையே பாரத யுத்தத்திற்கும் அவனது அழிவுக்கும் மூலகாரணமாகும். இப்படி ஒவ்வொரு பாத்திரத்தினது எண்ணக் கருவை அலசி அறிவதன் மூலம் நம் நெஞ்சங்களில் தீய நினைவுகளை நீக்கி நல்ல நினைவுகளை வேரூன்றச் செய்து நன்னிலை பெறுவோமாக. மகாத்மா காந்தியவர்கள் இளம் வயதில் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து அதில் ஈர்க்கப்பட்டு நேர்மை, அகிம்சை போன்றவற்றைக் கடைப்பிடித்து மகாத்மாவானார். எனவே எதற்கும் முதலில் நினைவு நல்லது வேண்டும்.

இந்தியாவில் தொண்டை நாட்டிலுள்ள திருநின்றவூரில் பூசலார் என்ற நாயனார் சிவபெருமானிடம் பேரன்பு கொண்டவர். அதனால் சிவனுக்கு ஒரு கோயில் கட்ட விரும்பி பொருள் தேடினார். கிடைக்காததால் மனதில் கோயில் அமைக்க நல்ல நாளப் பார்த்து ஆகம முறைப்படி ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணி பூரணமாகத் தன்மனக் கோயிலில் ஒரு திருக்கோயிலை வைத்துப் பூரணமாக அமைத்தார். பின்பு இறைவன் எழுந்தருளுவதற்கு ஏற்ற நன்நாளும் குறித்து நிச்சயித்தார். அதே வேளையில் காடவர்கோன் என்ற பல்லவ மன்னனும் பெரும் பொருள் செலவு செய்து கோயில் அமைத்து பூசலநாயனார் குறித்த அதே நாளில் இறைவனை எழுந்தருளச் செய்ய நிட்சயித்தார். முதல் நாள் இரவு இறைவன் அரசனது கனவில் தோன்றி ''திருநின்றவூரில் பூசலார் என்பவர் நீ குறித்த அதே நாளிலே நிட்சயித்திருப்பதால் நான் அன்றைய தினம் அங்கு எழுந்தருளியிருப்பேன். எனவே நீ வேறொரு

41ம் பக்கம் பார்க்க